
# ஞாயிறு



2 அணா

# அரசியற் கருத்துக்கள்

**[அன்று முதல் இன்று வரை]**

[பேராசிரியர் இருதயராஜ்]

கிரேக்கருடைய சரித்திரத்தில் ஆண்டான் அடிமை இவர்களுக்குள் ஓயாச் சண்டை—ரோமில் பெட்ரீஸியன் பிரபுக்களுக்கும், பிளெபியன் மக்களுக்கும் தீராப் போர்—அதற்குப்பின் பாளையப் பட்டக்காரருக்கும் பண்ணையாட்களுக்கும் சதா போராட்டம்—பின்னர் பிரெஞ்சுப் புரட்சி—18, 19, வது நூற்றாண்டுகளில் தொழிற் புரட்சிக்குப் பின் ஆலை முதலாளிகளுக்கும் கூலி வேலை செய்யும் தொழிலாளருக்குமிடையே பெரிய பிளவு—இவ்விதம் முதலிலிருந்து ஏதோ இரண்டு வர்க்கங்கள் பலப் பரீட்சை செய்துகொண்டு வந்ததாகத்தான் சரித்திரம் சாற்றுகிறதே யொழிய, போர்நடக்கவில்லை என்று சொல்லவில்லை. போர் முறைகள் மாறியிருக்கலாம். போர் ஓய்ந்ததாகச் சான்று இல்லை என்றார் மார்க்ஸ்.

இந்த வர்க்கப் போர் நடந்த பொழுதெல்லாம் பலமுள்ள கட்சியினர் அரசாங்கத்தை தமதாக்கிக் கொண்டு பலவீனர்களை அடக்கி அந்த நிலையிலேயே அமிழ்த்தி வந்திருக்கின்றார்கள். அந்தந்தச் சமயங்களில் அரசாங்கத்தைக் கைப் பற்றியவர்க்கம் சட்டங்களைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு அடக்கு முறையை ஏவி வந்திருக்கின்றது. அப்படித்தான் 19-வது நூற்றாண்டின் துவக்கத்தில் முதலாளிகள் அரசாங்கத்தைக் கைப் பற்றிக்கொண்டு தொழிலாளரை நசுக்கி அவர்களை வாழவிடாமல் வைத்துக்கொண்டிருந்தனர் என்றார் மார்க்ஸ். இந்த நிலையைத் தான் முதலாளித்துவம் என்று அழைத்தார்.

முதலாளித்துவத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது, முதலாளிகள் சமுகத்தில் அட்டைகள்போல தொழிலாளரின் இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள், தேன்கூட்டில் பல ஈக்கள் தேடிக்கொண்டு வரும் தேனைச்சில ஈக்கள் வேலைசெய்யாது உண்டு களித்திருப்பதைப்போல என்று கூறினார். ஆலை முதலாளிகள் தொழிலாளரை வேலைவாங்கித் தங்கள் இலாபத்தைப்பெருக்குகின்றார்கள்-உழைப்பவர்களுக்குப் போதிய ஊதியம் கொடுக்காமல் என்றார்.

ஒரு பொருளினுடைய மதிப்பு அந்தப் பொருளைச் செய்வதற்குத் தேவைப்பட்ட உழைப்பைப் பொறுத்தது. அதிக உழைப்பைக் கொண்ட பொருள் அதைவிடக் குறைவான உழைப்பைக்கொண்ட பொருளைவிட அதிக பெறுமானமுடையது. ஆகவே பொருள் விற்கப்படும்போது அதற்கு தரப்படும் கிரயம் முழுவதும் அந்தப் பொருளை உற்பத்திசெய்தவனுக்கே சேரவேண்டும். ஆனால் முதலாளித்துவ சமூகத்தில் விலையின் ஒரு சிறிய பகுதி தான் தொழிலாளிக்குத் தரப்படுகிறது. எஞ்சியபகுதியைத் தொழிலாளரை ஏமாற்றி முதலாளிகள் அபகரித்துக் கொள்ளுகிறார்கள் என்பது மார்க்ஸின் வாதம்.

ஒரு தொழிலாளி ஆலையில் அமர்த்தப்பட்டு ஒரு நாளைக்கு 10-மணி நேரம் உழைத்து 20கெஜம் துணியை உற்பத்தி செய்கிறான். அதை முதலாளி 20 ரூபாய்க்கு விற்றுவிட்டு அவனுக்கு கூலியாக 4 ரூபாய் மட்டும் தருகிறான். மிஞ்சிய 16 ரூபாயையும் முதலாளி தன்னுடைய முதலுக்கு வட்டியாக, கட்டிடத்திற்கு அல்லது நிலத்துக்கு வாடகையாக, தன் மேற்பார்வைக்குச்சம்பளமாக இலாபமாக, என்று இவ்வாறெல்லாம், எடுத்துக்கொள்ளுகிறான். இதைத்தான் கொள்ளை, சுரண்டல் என்று குறிப்பிட்டார் மார்க்ஸ்.

மேலே குறிப்பிட்ட தொழிலாளி ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் வேலை பார்த்தால் போதும். அவனுக்குத் தரப்படும் 4 ரூபாயை அந்த இரண்டு மணி நேரத்தில் சம்பாதித்து விடுகிறான். ஆனால் அவன் 10 மணி நேரம் வேலை செய்கிறான் ஆலையில். ஆக அவனுடைய 8 மணி நேர உழைப்பினால் முதலாளி உயர்கிறான். அவன் 4 கெஜம் நெய்தால் போதும். ஆனால் 20 கெஜம் நெய்கிறான். எனவே 16 கெஜம் துணி முதலாளிக்குத்தான் இலாபத்தைப் பெருக்க உதவுகிறது, இதைத் தான் அதிகப்படியான விலைமதிப்பு—அவனுடைய கூலிக்குப் போக அவனது அதிகமான உழைப்பின் பயன்—என்று மார்க்ஸ் குறிப்பிட்டார்.

தொழிலாளி கறவைப் பசுவைப் போல. பசு தன்னுடைய கன்றுக்குமட்டும் பால் சுரப்பதில்லை. கன்றுக்குப் போக அதிகமான பாலைக் கறப்பவன் எடுத்துக் கொள்ளுகிறான். அதுபோலவே, தொழிலாளியின் அன்றாட வாழ்க்கைக்குப் போதும் போதாததுமாக ஏதோ கொடுத்துவிட்டு—அவனை வேலைக்கமர்த்திய முதலாளி, தொழிலாளியின் அதிகப்படியான விலை மதிப்பைக் கறந்துகொண்டு விடுகிறான்.

தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் கூலி, எப்பொழுதும் தொழிலாளின் வாழ்க்கைச் செலவு—அதாவது உழைப்பின் உற்பத்திச் செலவு—அதற்கு அதிகமாகவோ குறைவாகவோ இருக்கவே முடியாது என்றார் மார்க்ஸ். தொழிலாளியின் குடும்பவாழ்க்கைச் செலவுக்குக் குறைவாகக் கூலி தரப்பட்டால், தொழிலாளர் நோய்வாய்ப்பட்டு இறந்துபடுவர்; அவர்களுடைய குடும்பம் வளராது—குழந்தைகள் எண்ணிக்கை குறை


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் 19-6-55 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி அளவில் என் தம்பி செல்வன் தி. வி. கணேசனுக்கும், திரு. ஏ. நடேசம்பிள்ளை குமாரி செல்வி நாகரத்தினத்திற்கும் திருச்சி சிந்தாமணி சின்னையாபிள்ளை சத்திரத்தில் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

அன்பர்கள் இதையே அழைப்பாக ஏற்று வருகைதர வேண்டுகிறேன்.

தி. வி. முத்துகிருஷ்ணன்,
திராவிடப்பண்ணை, திருச்சி.

**முகப்பில்...**

**"என்ன தகவல் வருமோ! வருகிற தகவல் எப்படியிருக்குமோ!!" என்று உலக நாடுகள் கூர்ந்து கவனிக்கும், ரஷ்ய வெளிநாட்டிலாகாவின் கட்டிடம் இது. இந்தக் கட்டிடத்தில் தான், வெளிநாட்டுப் பிரச்னைகள், அலசி ஆலோசிக்கப் படுகின்றன.**

யும்; அதனால் தொழிலாளரின் தொகை குறையும். அவர்களுக்குக் கிராக்கி அதிகரிக்கும். அதனால் கூலி உயரும் முன் அளவுக்கு. அதற்கெதிராக வாழ்க்கைச் செலவுக்கு அதிகமாகக் கூலி தரப்பட்டால் தொழிலாளரின் வாழ்க்கைத் தரம் அதிகரிக்கும். உயர்வான உணவு அருந்துவார்கள். நோய், பிணி இவைகள் அதிகம் அவர்களை அண்டாது, குடும்பம் பெருகும். பிள்ளைகளின் எண்ணிக்கை வளரும். தொழிலாளர் தொகை அதிகரிக்கும். அதனால் அவ்வளவு பேருக்கும் வேலை கிடைக்காமல் அவர்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு குறைந்த கூலிக்கு வேலை ஏற்றுக்கொள்ளுவார்கள்.

இந்த நியதிப்படி தொழிலாளரின் கூலி எப்பொழுதும் வாழ்க்கைச் செலவுக்குப் போதுமான அளவுக்குமேல், கூடவும் குறையவும் முடியாது. அதனால்தான் முதலாளிகள் இலாபம் அடையமுடிகிறது. அதனால்தான் தொழிலாளர் என்றுமே நன்ருக வாழமுடிவதில்லை.

ஒரு பொருளுக்குக் கிடைக்கும் விலைத்தொகை முழுவதும் தொழிலாளிக்கே கிடைக்கவேண்டியிருக்க, அவனுக்கு வாழ்க்கைச் செலவுக்குமட்டும் கொடுத்துவிட்டு, அதிகமானதை முதலாளி சுரண்டிக்கொள்ளுகிறுன்.

இவ்விதம் சுரண்டுவதற்கு வாய்ப்பு எப்படி முதலாளிக்கு வருகிறது! முதல் போடுகிறவன் அவன். உற்பத்தியாகும் சாமான்களைப பொறுத்திருந்து விற்று, விற்றபொழுது பணத்தை எடுத்துக்கொள்ளச் சமமதிக்கிருன் அவன். காத்திருக்க இயலாத தொழிலாளி முன் பணமாகக் கிடைத்த கூலியைப் பெறுகிருன்.' பொறுத்தவன் பயனடைகிருன்.

தொழிலாளிக்குச் சொந்தமாக முதல் இல்லை. ஒருவனை அண்டியே பிழைக்கமுடியும். மேலும், அன்ருடம் வயிறு வளர்க்கவேண்டிய நிலையில் உள்ளவன். நல்ல கூலி கிடைக்குமென்று அவன் காத்திருந்தால், அதாவது உழைக்காமல் நாளைப் போக்கினுல், அவன் வயிறு காயும். ஒரு நாளை அவன் வீணுக்கிவிட்டால், அந்நாளின் கூலி அவனுக்கு என்றுமே திரும்பக் கிடைக்கப் போகிறதில்லை. வீணுக்கிய ஒரு நாளைக்குச் சேர்த்து இன்னெரு நாள் அவன் உழைத்துக் கொள்ளலாம் என்று இருக்கமுடியாதவன் அவன்.

முதலாளிக்குச் சேர்ந்திருக்கும் சொத்தெல்லாம் இவ்வாறு தொழிலாளியின் பரிதாபமான நிலையைப் பயன்படுத்தி, அவனைச் சுரண்டிச் சேர்த்ததுதான். எல்லாம் திருட்டுச்சொத்து. இந்தத் திருட்டைக் கண்டுபிடித்தவர் கார்ல் மார்க்ஸ்.

இந்தத் திருட்டுக்கு ஆதரவாயிருப்பது அரசாங்கம்—முதலாளித்துவ அமைப்பில். அந்த அரசாங்கமே முதலாளிகன் ஆதிக்கத்தில் இருக்கும். தொழிலாளர் அதிகக் கூலி கேட்டால் அல்லது முதலாளியின்பேரில் குறைகளைக் கண்டு அவைகளை நிவர்த்திக்க முயற்சித்தால், அல்லது தொழிற்சங்கங்களின் துணைகொண்டு கிளர்ச்சிகள் செய்தால், அரசாங்கம் அடக்குமுறையை வீசும். இதைத்தான் பத்தொன்பதாவது நூற்ருண்டின் முற்பகுதியில் கண்முன்னே கண்டார் கார்ல் மார்க்ஸ்.

முதலாளித்துவப் பொருளாதார முறையில் காணப்படும் இந்த முரண்பாடு எவ்வளவு காலம் நீடிக்கும்? வரலாறு தரும் பாடத்தின்படி இந்தப் போராட்டமும் ஒரு முடிவுக்கு வந்துதானுக வேண்டும் என்ருர் மார்க்ஸ்.

முதலாளிகள் ஆதிக்க வெறியாலும், தொழில் திறமையாலும் மேலும் மேலும் உயர்வடைந்து தங்கள் தொழிலை விஸ்தரித்துக் கொண்டே போவார்கள். செல்வம் ஒரு சிலருடைய கையில் குவிந்து கொண்டே போகும். தொழிலாளரின் தொகை வளர்ந்துகொண்டே போகும். ஒவ்வொரு நாட்டிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் செல்வத்தில் புரளவும், அவர்களுடைய கை சைகையிலே, தலை அசைவிலே, அவர்களின் விருப்பையும் வெறுப்பையும் தெரிந்துகொண்டு, தொண்டு ஊழியம் செய்ய அவர்களுடைய காலடியிலே கிடப்பார்கள் கோடிக் கணக்கானவர்கள்.

முதலாளிகளிடையே போட்டி—தேவைக்கு மேல் உற்பத்தி, ஒருவர் ஒருவரைக் கீழே சாய்க்க எண்ணி விலையிலே படிப்படியாக இறக்கம்—அதனல் தொழில் மந்தம்—ஆலைகள் மூடுபடலம்—வேலையில்லாமல் பலர் அவதிப்படும் அல்லல்—உற்பத்திக் குறைவு—அதன் விளைவாக திரும்பவும் கிராக்கி அதிகரித்து, விலையேற்றம்—இப்படியே அரசாங்கக் கட்டுப்பாடும், முதலாளிகளுக்குள்ளே கண்ணியமும் இன்றி பொருளாதாரத் துறையிலே மாறி மாறி விலை ஏற்றமும், மந்தமும் ஏற்படும். தேவையில்லாத சாமான்கள் நிறைய உற்பத்தி செய்யப்படும். வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் கிடைப்பதரிதாகப் போய்விடும். முதலாளிகள் ஒன்றுபட்டுக் கூட்டுச்சேர்ந்துவிட்டால் அவர்கள் ஏற்றி வைத்ததே விலை. மக்கள் அதிக விலை கொடுத்துத்தான் வாங்கியாக வேண்டும். இவைகளால், மக்களிடையே மனக் கொதிப்பு ஏற்படும்.

இந்த நிலையில் நாட்டுக்கு நாடு போட்டி. வியாபாரச் சந்தைகள் பிடிக்க ஒருவர் ஒருவருடன் போட்டி. வியாபாரச் சந்தைகள் பிடிக்க ஒருவர் ஒருவருடன்போட்டி ஆரம்பித்து அதன் விளைவாகப் போர்.

இது தான் சமயம், பாட்டாளிகள் போர்ப் பரணி பாடுவதற்கு. இதுவரை சீமான்களைப் பல்லக்கில் தூக்கிக் கொண்டிருந்த தொழிலாளர் பல்லக்கை இறக்கி வைத்துவிட்டு அந்தப் பல்லக்கில் தாங்கள் ஏறுவதற்கு இது தான் தருணம். 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' என்று முரசு கொட்டினுர் மார்க்ஸ். ஊமைகளாகயிருந்தவர்களை உரிமை முழக்கம் செய்ய அழைத்தார் மார்க்ஸ்.

(தொடரும்)

# மக்கள் கரமும்



# மன்னன் சிரமும்

**சி.என்.அண்ணாத்துரை.**

**இளவரசன்,** எதிர்கால வேந்தன் சார்லஸ், ஒரு பிராடெஸ்டென்டு மங்கையை மணந்துகொள்வதுதான், நாட்டிலே மதச் சீர்குலைவு ஏற்படாதிருக்கும் என்பதற்கான உறுதி தரும், என்று மக்கள் எண்ணிட, மன்னனோ, மதம் எதுவாயினும் சம்மதமே, பொருள் எவ்வளவு தாக்கூடும், அதைப் பொறுத்தே பெண்கொள்ளல்வேண்டும் என்று கூறினான்—அம்முறையிலேயே 'தூதுகள்' சென்றன, வந்தன, ஏற்பாடுகள் உருவாகிக்கொண்டிருந்தன.

இளவரசனுக்குப் பெண் தர இரு பேரரசுகளிலே முன்வந்தனர்—ஸ்பெயின், பிரான்சு. பணம் உண்டு, ஆனால், சில நிபந்தனைகளும் உண்டு! இரு பேரரசுகளும், கத்தோலிக்க மார்க்கம். எனவே, இரு அரசுகளும், ஜேம்ஸ் கேட்கும் தொகை தர முன்வந்தாலும், திருமணத்துக்கான முதல் நிபந்தனையாக, கத்தோலிக்க மார்க்கத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும் என்றனர். இதிலே ஸ்பெயின் நாடு, தொகையும் அதிகமாக அளிக்க இசைந்தது, அதுபோலவே நிபந்தனைகளும் சடுமையாக இருந்தன—மக்கள் மனதிலே, இந்தக் 'கலியாணப் பேச்சு' மேலும் வேதனையை மூட்டிற்று.

மக்களின் விருப்பத்தைத் துளியாவது மதித்து நடக்கும் மன்னனாக இருந்தால்தானே, இதற்காக ஜேம்ஸ் கவலைப்படுவான்! அவன்தான் ஆண்டவன் அருள்பாலிக்கப் பெற்றவனாயிற்றே, மக்களின் துணை ஏன்! எந்தப் பெண், அதிகமான பணம் கொண்டுவருவாளோ, அவளையே தேர்ந்தெடுப்பது என்று திட்டமிட்டான், பக்கிங்காம் இதை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பாளனாக்கப்பட்டான். இளவரசனே, நேரில் சென்று, ஸ்பெயின் நாட்டு இளவரசியைக் கண்டு, காதலைக் காணிக்கையாக்குவதென்றும், பக்கிங்காம் திருமண ஏற்பாட்டைத் தீட்டிக் கொண்டு வருவதென்றும், தீர்மானிக்கப்பட்டது—அதாவது, பக்கிங்காம் தீர்மானித்தான், மன்னன் இணங்கினான், இளவரசன் பாராட்டினான், என்று பொருள்.

இளவரசனும் பக்கிங்காமும், மாறுவேட மணிந்து, ஸ்பெயின் நாடு சென்றனர். இருவரும் வாலிபப் பருவத்தினர். சார்லஸ், அழகன்! பக்கிங்காம் தன் அழகெனும் அம்பு எந்த அரண்மனையையும் துளைக்கவல்லது என்ற அபாரமான நம்பிக்கைகொண்டவன்.

"இளவரசரே! தங்களைக் கண்டதும், இளவரசி, சொக்கிப்போய்விடுவது நிச்சயம். தந்தையிடம் கெஞ்சுவாள் அந்தத் தையல். தோழிகள்மூலம் சொல்லுவாள், கடுமையான நிபந்தனை விதித்து, அந்தக் கட்டழகனை விரட்டிவிட வேண்டாம் என்று மன்றாடுவாள். தூதுவர் பேசிய பலன் ஏற்படாது—ஓலைகள் அனுப்புவது உருப்படாது, மங்கை தன் மலர்விழியால் தங்கள் தங்கத் திருமேனியைக் காண வேண்டும், தாளில் வீழ்வாள், திருமணம் நிச்சயம்!" என்று பக்கிங்காம் எடுத்துரைக்க, வாலிப உள்ளத்துக்கு மகிழ்வளிக்கவல்ல காதல் விளையாட்டு இது என்ற சுவை மிகு எண்ணம் கொண்ட இளவரசன், எவ்வளவு பரவசமடைந்தானோ, யார் கண்டார்கள்! கன்னியரைத் தன் கடைக்கண்ணால் கவரமுடியும் என்று பேசித்திரிந்த பக்கிங்காம், இளவரசனுக்குக் காதல் காட்சி காட்டச் செல்லும் அதேபோது, தனக்காக என்னென்ன இன்ப விருந்துகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தானோ, யார் கண்டார்கள்! மக்களோ, இந்தச் செய்தி அறிந்து பயம் கொண்டனர்.

ஸ்பெயின் போர்ப்பாண்டவரின் பாததூளிபட்டால் புண்யம் கிடைக்கும் என்று கருதும் அளவுக்கு கத்தோலிக்க ஆர்வம் கொண்ட நாடு. ஐரோப்பாவில், அழிந்துபட்ட இடங்களிலெல்லாம், மீண்டும் கத்தோலிக்க மார்க்கத்தைப் புகுத்தவேண்டும், இந்தப் புனிதகைங்கரியத்தை, எப்பாடு பட்டேனும் நிறைவேற்ற வேண்டும், என்ற எண்ணம் கொண்ட நாடு. அந்த நாட்டு இளவரசி, சார்லசின் தேவியாகிவிட்டால், பிரிட்டனில் பிராடெஸ்டென்டு மார்க்கத்தின் கதி என்ன ஆகும், என்று எண்ணி அஞ்சினர். திருமணம், சொந்தவிஷயம், அதிலும் இதுவோ அரண்மனைத் திருமணம், எனவே, இதிலே குறுக்கிட்டு, கருத்துக் கூறல் கண்ணியமல்ல, என்ற எளிதில் புரியக்கூடிய அறிவு பெறாதவர்களல்ல, மக்கள்; அவர்கள் அதனை நன்றாக அறிவர், ஆனால், மன்னனாக வேண்டிய சார்லஸ், கத்தோலிக்க மார்க்கக் கன்னியை மணந்துகொண்டு, திருமண நிபந்தனையின் காரணமாகவோ, அல்லது காதல் கணையின் விளைவாகவோ, பிரிட்டனை மீண்டும் கத்தோலிக்க நாடு ஆக்குவது என்று முனைந்தால், ஏற்படக்கூடிய விபத்துகள், படுகொலைகள், இரத்த வெறிச் செயல்கள், அக்ரமங்கள் இவைகளைப் பற்றி எண்ணிப் பார்க்கும் பொறுப்பை அவர்கள் அறியாமலிருக்க முடியாது! எனவேதான், நாட்டுக்குப் பெருங்கேட்டினைத் தரவல்ல திருமணம் கூடாது, என்று கூறினர்! மன்னனோ கேட்பான்! ஆண்டவனின் அம்சம்!!

திருமண ஏற்பாடுபற்றி, ஜேம்சும், சார்லசும், பக்கிங்காமும் ஆவல் அதிகம்கொண்டனர்; ஸ்பெயின் அரசனோ, இதிலே விருப்பம் கொண்டவனல்ல, பிரிட்டனைத் தன் பக்கம் இழுக்க, இந்தத் திருமணப் பேச்சை ஒரு வாய்ப்பாகக்கொண்டான். பலமுறை தூது சென்றும், ஏற்பாடு கனிவடையாததால்தான், காதல் போர்க்களம் நோக்கி, சார்லசே புறப்பட்டான்.

''அண்ணா! நான் அந்த நாத்திகனைத் திருமணம் செய்துகொள்ளமுடியாது'', என்று ஸ்பெயின் இளவரசி, உடன்பிறந்தானிடம் கண்டிப்பாகக் கூறிவிட்ட செய்தி, மாறுவேடம் அணிந்து, மகிழ்ச்சியாகச் செல்லும் இளவரசனுக்கு என்ன தெரியும்? கத்தோலிக்க மார்க்கத்தினள் இளவரசி; எனவே, அந்த மார்க்கமல்ல, பிரிட்டிஷ் இளவரசன் என்றதும், நாத்திகன் என்று கண்டிக்க நேரிட்டது—அந்த நாட்களிலே அதுதான் முறை!

ஸ்பெயின் நாட்டு அரச குடும்பம், அடைய இருக்கும் பூரிப்பையும் பெருமையையும், ஏற்பாடு செய்யப்போகும் வரவேற்புகளையும் விருந்துகளையும், அங்கு பூவையர் தர இருக்கும் புன்னகை இன்பத்தையும், எண்ணி எண்ணி மகிழ்ந்தே, இளவரசன், பக்கிங்காமுடன் செல்கிறான். ஸ்பெயின் நாட்டிலேயோ, பாதிரிகள் கவலை நிரம்பிய முகத்துடன் கூடி, ஏடு பல புரட்டியபடி உள்ளனர், இந்தத் திருமணம், சன்மார்க்கத்துக்கு உகந்ததா என்பதுபற்றி. மணப்பெண்ணோ, நாத்திகனுக்கு நான் வாழ்க்கைப்படமாட்டேன், என்று உறுதியை வெளியிட்டாகிவிட்டது—எனினும், எதற்கும் இரண்டெழுத்து ஆங்கிலம் கற்றுக்கொள்வது நல்லது என்று ஒரு ஆசிரியர் அமர்த்தப்பட்டிருக்கிறார்.

ஸ்பெயின் போகுமுன், ஒய்யார பக்கிங்காமும், உடன் சென்ற சார்லசும், பாரிசில் ஒரு நடனவிழாவைக் கண்டனர்—அங்குதான், சார்லஸ், பிரன்ச்சு நாட்டு இளவரசி ஹெனிரிட்டாவைக் கண்டான். அழகி! பதினைந்து ஆண்டுகள் நிரம்பிய பாவை! பார்த்தவரை ஈர்த்திடும் வனப்பு! எனினும், சார்லஸ், எங்ஙனம் அந்த இன்பவல்லியிடம் மனதைச் செலுத்தமுடியும்? அவன் 'தேவி' இருக்கும் திருத்தலம் 'மாட்ரிட்' ஸ்பெயின் நாட்டுத் தலைநகர். நடன விழாவிலே கண்ட நளினிதான் தன் நாயகியாகப்போகிறாள் என்பதைச் சார்லஸ் எப்படி அறியமுடியும். அழகாகத்தான் இருக்கிறாள் இந்த அரசிளங்குமரி, மனம் நெகிழத்தான் செய்கிறது, என்றாலும், பலன் இல்லையே, அவள் 200,000 பவுன்தானே கொண்டுவருவாள்; அதோ ஸ்பெயினில் உள்ள திருமகள், 600,000 பவுனல்லவா கொண்டுவர இருக்கிறாள்! எனவே பிரன்ச் காரிகையைக் கண்டு களிப்புற்றாலும், காரியம் வேறு இருக்கிறது என்ற உறுதியுடன் ஸ்பெயின் சென்றான் இளவரசன். அங்கு அவன் கண்டது வரவேற்பல்ல! காதல பொழியச் சென்றான், கண்டிப்பான நிபந்தனைகளை அரசாங்க அலுவலர்கள் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கும் வேலைதான் அதிகம் இருந்தது.

சார்லசுக்கு, இளவரசியின் காதல் கிடைக்கவில்லை—பேட்டிதான் கிடைத்தது! உயிரற்ற பேச்சு, கனிவற்ற பார்வை, அதரம் துடிக்கவில்லை, கன்னம் சிவக்கவில்லை, கன்னியின் பார்வையிலே ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. மற்றோர் முறை மலர்த் தோட்டத்திலே அவள் உலவிக்கொண்டிருந்தாள்—காதலுக்கு ஏற்ற இடம் இந்த இயற்கைச்சித்திரம் என்றெண்ணி, சார்லஸ் அணுகினான், மயில் பறந்தே போய்விட்டது!

கண்டதும் காதல் கொள்ளாத காரிகை, எந்த மாளிகையிலே இருக்கிறாள் என்று கர்வம் பிடித்துப் பேசும் பக்கிங்காம் பிரபுவுக்கு, நிலாச் சோறும் கிடைக்கவில்லை! அவனுடைய ஆணவப்போக்கு அருவருப்பே உண்டாக்கிற்று. பணத்தாசை கொண்டு, பல்லிளிக்க வந்திருக்கும் இளவரசன், அங்கு கேலிப் பொருளாக்கப்பட்டான்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கடுமையான நிபந்தனை எடுத்துக் கூறப்பட்டது. சார்லசுக்கு உண்மை விளங்கி விட்டது; ஊர் சென்றால் போதும் என்றாகிவிட்டது. பிரிட்டனில், ஜேம்ஸ் மன்னனும் அச்சம் கொண்டான். காதல் பொழியச் சென்ற ஆசை மகனை, காதகர்கள், சிறைப்படுத்திவிட்டு, எல்லா நிபந்தனையையும் ஏற்றுக்கொண்டால் தான் விடுதலையும் திருமணமும், என்று கூறிவிட்டால் என்ன செய்வது, என்ற அச்சம்.

வீண் வேலையாக முடிந்தது, இந்த இளைஞர்களின் காதல் பயணம், பிரிட்டன் திரும்பினான் சார்லஸ், மக்கள் மகிழ்ந்து வரவேற்றனராம், சார்லசிடம் புதிய அன்பு பிறந்ததால் அல்ல, ஸ்பெயின் நாட்டுப் பெண் வரவில்லை என்ற மகிழ்ச்சியால்!

பக்கிங்காம், தூபமிடலானான், ஸ்பெயினுடைய துடுக்குத் தனத்தைத் தாக்க வேண்டுமென்று. சார்லசும், துணை நின்றான், ஜேம்சுக்கும் அது நியாயம் என்று தெரிந்தது, மக்கள் கூட வரவேற்றனர். அந்த நேரத்திலாவது, ஜேம்ஸ் மக்களுடைய ஆதரவைப் பெற முயன்றிருக்கலாம், செய்தானில்லை, ஏன் செய்வான், அவன் தான், மக்களை மதிப்பது மன்னனுடைய மகிமையைக் கெடுத்துவிடும் என்ற கேடான கருத்துக் கொண்டிருந்தானே!

பிரன்ச்சு நாட்டு அழகி ஹெனிரிட்டாவை, சார்லஸ், திருமணம் செய்துகொள்வது, என்று ஏற்பாடாயிற்று. நிபந்தனைகளின் கடுமை ஓரளவு குறைவுதான், என்ற போதிலும், இந்தத்திருமணத்தின் விளைவாகப் பிரிட்டனில் கத்தோலிக்க ஆதிக்கம் தலைதூக்கும், என்ற அச்சம் மக்கள் மனதை வாட்டத்தான் செய்தது. கொதிப்புள்ளம் கொண்ட மக்களை, கொண்டமட்டும் கிளறி விட்டுவிட்டு, இனி என் மகனிடம் கணக்குத் தீர்த்துக்கொள்க என்று கூறுவதுபோல, ஜேம்ஸ் இறந்துபட்டான்; சார்லஸ் பட்டத்தரசனானான், பக்கிங்காம் அரசாளத் தொடங்கினான்.

ஆக, சார்லஸ் பட்டத்தரசனானபோது, தீதான தத்துவம், தீய குணமுடைய பக்கிங்காம், தீராத பணமுடை, திகில்கொள்ளவைக்கும் மார்க்கத்தைச் சார்ந்த துணைவி, இந்த அணிகள் அழகு செய்தன! மக்களோ மருண்ட நிலையில். மாமன்றமோ, உறுதியுடன்! மார்க்கப்பிரிவுகளோ, மல்லுக்கு நிற்பதில் போட்டியிட்டவண்ணம்! வெளிநாடு களிலோ, பகைப்புகை! இந்தச் சூழ்நிலையில் துவக்கமாகிறது சார்லசின் ஆட்சி—ஆனால், அது ஜேம்ஸ் ஆட்சியின் தொடர்கதையாக இருக்கிறதே தவிர, புதிய முறை ஏதும் காணப்படவில்லை. ஜேம்ஸ் பிடிவாதமாக எதைவலியுறுத்தி வந்தானோ, அந்தக்கொள்கையை, விளைவுபற்றிய கவலையு மற்று வலியுறுத்துவதற்கே சார்லஸ் முனைந்தான். மன்னர் புதிது. முறை எப்போதும் போலத்தான். மாமன்றத்தினரோ, புதிய வலிவுடன் தோன்றினர். மக்களிடையே, உரிமை பற்றிய எண்ணம் தெளிவாக்கப்பட்டுவிட்டதால், கிளர்ச்சிப் போக்கு வெளிப்படையாகவே தெரியலாயிற்று. மக்களின் உரிமைக் கிளர்ச்சியைத் திறம்பட நடத்தும் அறிவாற்றல் படைத்தவர்களும், பிரிட்டிஷ் அரசியல் முறையைப் புதுப்பிக்கும் பேரார்வம் கொண்டவர்களுமான போக், பிம், ஹாம்டன், செல்டன், டிகிஸ், எலியட், போன்ற வீரர்கள் மாமன்றத்திலே உறுப்பினர்களாகி இருந்தனர். இதுவரை எப்போதும் காணப்படாத ஆர்வம் கொழுந்துவிட்டெரியும் நேரம். அரசியல் துறையின் அடிப்படைக் கொள்கைகளை அலசும் போக்குத் தெளிவாகிக்கொண்டிருந்தது. மக்களின் உரிமையைப் பெறவும், பாதுகாக்கவும், மாமன்றம் பயன்படவேண்டும் என்ற எண்ணம் பலமாகிவிட்டது. மன்னன் அல்ல, மாமன்றமே, அரசாளும் பொறுப்பை அறிந்தொழுகும், எனவே நாம், மாமன்றத்தின் பக்கமே நிற்கவேண்டும் என்று மக்கள் கூறலாயினர். எங்கும், அரசன் செய்த அக்ரமத்தைப் பற்றியும்,

அவன் வலியுறுத்திய 'தேவாம்ச' தத்துவம் பற்றியும், நாட்டைக் கெடுக்கும் துரோகிகளுக்கு இடமளிப்பது பற்றியும் மக்கள் கண்டித்தனர். அவன் மகன் இவன்! இவனுடன் இருப்பவனும், பக்கிங்காம்! இலட்சணம் இவ்விதம் இருக்கும்போது நிலைமை எங்ஙனம் திருந்தும் என்று ஆயாசப்பட்டனர். மாமன்றம் ஒன்றுதான், இந்த நோய்களுக்கெல்லாம் மாமருந்து, என்று எண்ணினர். பாசறை அமைந்துவிட்டது!

சார்லசுக்கு வயது இருபத்துஐந்து; அவன் மணம் செய்துகொண்ட ஹெனிரிட்டாவுக்கு, பதினைந்துவயது. காட்சிக்கு இனியவன், கற்றறிந்தவன், கலை நுட்பம் அறிந்தோன், ஒழுக்க சீலன், மக்களுடைய பாராட்டுதலைப் பெறுவதற்குத் தேவையான அருங்குணம் அவனிடம் இருக்கத்தான் செய்தது. ஆனால் மக்களை அச்சமும் அருவருப்பும் அடையச்செய்யும் 'கொள்கை'யையும் கொடியவன் என்று நாட்டினரால் கண்டிக்கப்பட்ட பக்கிங்காமையும், விடமறுக்கும்போது அருங்குணம் படைத்திருந்தாலும், பயனற்றுப் போய்விட்டது.

சார்லஸ், துவக்கத்திலேயே மாமன்றத்திடம் பணம் கேட்கவேண்டியதாயிற்று. அத்தகைய நிலைமையை உருவாக்கிக்கொண்டதும், மன்னனே!

ஸ்பெயினுடன் போர் தொடுக்கத் தீர்மானமாகிவிட்டது. ஐரோப்பாவில், உடன் பிறந்தாளின் கணவனை பலாடினேட் அரசகுமாரன் சிக்கிக்கொண்ட போருக்கு உதவி செய்யும் ஏற்பாடும் இருந்தது. ஐரோப்பிய சமரில் பிரிட்டன் பங்குகொள்ளும் நிலைமையையும் மன்னன் உண்டாக்கிக்கொண்டான். அதற்கான பெருஞ்செலவுக்குப் பணம் தேவை. டென்மார்க் நாட்டு மன்னனுக்குமட்டும் 360.000 பவுன் ஆண்டொன்றுக்குத் தருவதாகச் சார்லஸ் வாக்களித்துவிட்டான். மாமன்றத்தின்மூலம் நாட்டு மக்கள் அனைவரும் திரண்டெழுந்து, மன்னன்பக்கம் நின்றால்மட்டுமே நிறைவேற்றக்கூடிய மகத்தான பொறுப்புகளை, மக்களின் உரிமையை மறுப்பதையே தத்துவமாகக்கொண்ட மன்னன் மேற்கொண்டது நொண்டி ஓட்டப்பந்தயத்துக்கு இசைந்து, உள்ள பொருள் அனைத்தையும் பணயம் வைத்த கதைபோலாயிற்று.

மாமன்றம் கூடிற்று — மன்னன் பேசினான் — தன் ஆட்சிமுறை எங்ஙனம் இருக்கும் என்பதுபற்றி அல்ல, தனக்கு உடனடியாக எவ்வளவு தொகை தேவை என்பது பற்றி. மாமன்றம் நிதானமாகத் தன் காரியத்தைக் கவனிக்கலாயிற்று. "மன்னனுக்குத் தொகை தேவையாம்! கவனிப்போம்! ஆனால் முதலில் மக்களின் மனதை உறுத்திக்கொண்டிருக்கும் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க மன்னன் முனையவேண்டும்" என்று மாமன்றம் கூறிவிட்டு, "உரிமைகள்பற்றிய" அறிக்கை தயாரித்து, மன்னனிடம் தந்தது. மன்னன் வெகுண்டான். ஜேம்ஸ் மன்னன், இதுபோல நடந்துகொண்டதற்காக, ஒருமுறை மாமன்றத்தின் குறிப்பேட்டைக் கொண்டுவரச் செய்து, தன் கையாலேயே அதனைக் கிழித்தெறிந்தான், அவன் மகன் சார்லஸ்! எனினும் ஆரம்பக்கட்டமல்லவா, எனவே, 'உங்கள் குறைகளைத் தீர்த்துவைக்கிறேன், முதலில் பணம் பெற வழி செய்யுங்கள்" என்று வாதாடினான், மாமன்றம், மன்னனின் மொழியிலே கனிவு இருப்பினும் கடுப்புக் காணினும் கவலை இல்லை, காரியம் நிறைவேற்றப்படவேண்டும் என்ற குறிக்கோளுடன், மன்னன், பிராடெஸ்டெண்டு மார்க்கப் பிரசாரத்துக்கான ஏற்பாட்டினைச் செம்மைப்படுத்த வேண்டும் என்பதையும், பிரிட்டிஷ் அரச மார்க்க முறைப்படி தொழுகைநடத்தத் தவறுபவர்களுக்கு அபராதம் விதிக்கவேண்டுமென்று, கூறினர்.

படைகளோ அமைக்கப்படுகின்றன; பணம் அவசரமாகத் தேவை, போர்வீரர்களுக்குச் சம்பளம் தரப்படவில்லை, உடை கூடச் சரியாக இல்லை! கலங்கள் தேவை கடற்போருக்கு! ஸ்பெயின் நாட்டுடன் போரிடவேண்டும் —இந்த நெருக்கடியான நேரத்தில் மாமன்றம் உரிமை பற்றிப் பேசுவதா என்று மன்னன் கோபம் கொண்டான், மாமன்றத்தைக் கலைத்துவிட்டு, வேறு வழிகளில் பணம் தேட முனைந்தான் — தந்தை சென்ற அதே, தகாத பாதை!

மன்னனுடைய சீற்றத்துக்கு முக்கியமான காரணம், பக்கிங்காம் மீது மாமன்றம் கண்டனம் தெரிவித்ததாகும். மாமன்றத்தின் துணையின்றி அரசு செலுத்த முடியும், என்ற துணிவுடன் சார்லஸ், பணம் தேடலானான். பணம் திரட்டி, கடற்படையைச் செம்மைப்படுத்தி ஸ்பெயின் மீது போர் தொடுத்தால், வெற்றி நிச்சயம் கிடைக்கும், வெற்றியின் போது, ஸ்பானிஷ் கப்பல்களைப் பிடித்தால், கொள்ளை கொள்ளையாகச் செல்வம் கிடைக்கும் என்று நம்பினான். பாபம்! மானைத் தேடிச்சென்றே, பிடித்திட முடியாமற்திரும்பினான், இப்போது புலியைவேட்டையாடிக் கொன்று, அதன் குகையிலிருக்கும் புதையலைப் பெறக் கிளம்பினான். சார்லஸ் மன்னனிடம், இந்தக் குறைபாடு, நிரம்பி இருந்தது. தனக்கு வேண்டியவர்கள் சொல்வதை ஆராய்ந்து பாராமல் நம்பிவிடுவது, சார்லசின் சுபாவம். தானாக ஒரு முடிவுக்கு வந்தாலும், அது சரியான முடிவுதானா என்று ஆராய்வதில்லை, அதிலே அசைக்கொணாத நம்பிக்கை கொள்வான். போர் குறித்து அவன் கொண்ட நம்பிக்கையும் அத்தகையதே. போரிலே, பிரிட்டன் கேவலமான தோல்வி அடைந்தது! மக்கள், ஒரு புறம் வேதனை அடைந்தனர், மற்றோர் புறம் மகிழவும் செய்தனர். மக்களுடைய ஆதரவை மாமன்றத்தின் மூலம் பெருமலேயே, போரில் குதித்த மன்னன், தோல்வி கண்டதே சாலச் சிறந்தது, இதனின்றும் நல்ல பாடம் பெறுவான் என்று எண்ணி மகிழ்ந்தனர், ஆர்ப்பரித்து வந்த ஸ்பானிய கடற்படையை எலிசபெத் ராணியார் காலத்தில் தோற்கடித்த பிரிட்டிஷ் கடற்படை தோற்கிறதே, கீர்த்தி கருகிவிட்டது, கேவலமான பெயரல்லவா கிடைக்கிறது என்று எண்ணும்போது வேதனையாகத்தான் இருந்தது. ஸ்பெயின், கத்தோலிக்கக் கோட்டை—பிரிட்டன் பிராடெஸ்டெண்டு மார்க்கத்துக்குப் பாதுகாவலன் என்ற எண்ணம் மெள்ளமெள்ளப் பரவிக்கொண்டிருந்தது, அந்த மதிப்பு மங்கிவிட்டதே, என்பதை எண்ணி மக்கள் வருந்தத்தான் செய்தனர்—மன்னர்கள் போல, நாடு எக்கேடோ கெட்டும், என்று இருந்துவிடுவதா, மக்கள் பண்பு! அவர்கள் இந்தத் தோல்வி கண்டு துயருற்றனர்—துயரம் பிறகு கோபமாக மாறிவிட்டது. கேவலமான பெயர்! நாட்டுக்கு!!—யாரால்? மதிகெட்டவர்களையும் மமதையாளர்களையும் சூழ நிறுத்திக்கொண்டிருக்கும் மன்னனால். போர், மக்களின் சார்பிலே தொடுக்கப்படவில்லை, பக்கிம்காம், ஸ்பெயின் கொலுமண்டபத்திலே மதிப்பிழந்தான். வீம்புக்காக அவன் இந்தப் போரை மூட்டிவிட்டான்—தக்க காரணமற்றுப் போரை மூட்டிவிட்டுப் போதுமான திறமையைக் கட்டத் தவறி, நாட்டுக்குக் கேவலத்தைத்தேடிவைத்தார்கள், எப்படி இவர்களின் போக்கைச் சகித்துக்கொள்வது, எவ்வளவு காலத்துக்கு இந்தச் 'சுமை'யைத் தாங்கிக்கொள்வது, என்று பேசலாயினர்.

இந்தத் தோல்வி போதாதென்று பக்கிங்காம், வேறோர் தோல்வியையும் சிரமப்பட்டுத் தேடித்தந்தான்.

(தொடரும்)

நாகர்கோயிலில்
'திராவிட நாடு' ஏஜண்ட்
சிட்டி நியூஸ் & புக்ஸ்டால்
டவர் ஜங்ஷன், நாகர்கோயில்.

# தத்துவம்

கம்யூனிஸ்டு:—என்ன தோழரே! எப்படி இருக்கிறது பார்த்தீரா, சோவியத் நாடு தரும் உபசாரம்.

காங்கிரஸ்:—ப்ரமாதம்! நான் இப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கவே இல்லை.

கம்யூனிஸ்டு:—முதலாளித்வ நாடுகளால் தான் விருந்து, வைபவம், ராஜோபசாரம் நடத்த முடியும் என்று 'ஜம்பம்' பேசினார்களே, இப்போது சோவியத் நடத்திய விருந்து வைபவங்களைக் கண்ட பிறகு, என்ன சொல்வார்கள்?

காங்கிரஸ்:—நேரு பண்டிதருடைய பெருமை அப்படிப்பட்டது— சோவியத் தேசம்கூட அவருக்கு 'ராஜோபசாரம்' செய்கிறது!

கம்யூனிஸ்டு:—சோவியத்தின் பெருமை இப்போதாவது தெரிகிறதா, உமக்கு.

காங்கிரஸ்:—நேருவின் கீர்த்தி இப்போதாவது உமக்குப் புரிகிறதா?

கம்யூனிஸ்டு:—காம்ரேட்! இப்போதும் உமக்குத் தவறான கண்ணோட்டம்தான் இருக்கிறது. இப்போது நடைபெறும் சம்பவம், சோவியத்தின் பெருமையைக் காட்டுகிறது, அதைத்தான்.

காங்கிரஸ்:—இல்லை, நேருவின் பெருமையை,—செல்வாக்கைத் தான் காட்டுகிறது.

கம்யூனிஸ்டு:—தவறு, காம்ரேட்! மிகத் தவறு.

காங்கிரஸ்:—இல்லை, காம்ரேட், மறக்காலும் இல்லை. நேருவின் செல்வாக்கைக் கண்டு, சொக்கிப் போனதாலே தான், உங்கள் சோவியத் நாடு, எங்கள் பண்டிதருக்கு 'சோடசோபசாரம்' செய்கிறது.

கம்யூனிஸ்டு:—அப்படிப் பேசாதீர், ஐயா! நேருவின் செல்வாக்கைக் கண்டு, சோவியத் ஒன்றும் மயங்கிவிடவில்லை. சோவியத்தின் சோபிதத்தைப் பார்த்துத்தான் உங்கள் நேரு சொக்கிப் போய்விட்டார்! அங்கே போய், பல்லிளிக்கிறார் பரவசப்படுகிறார்......

காங்கிரஸ்:—நாவை அடக்கய்யா செங்கொடி! பல்லை இளிப்பவர் எமது பண்டிதரல்ல... உங்கள் புல்கானின் தான் பல்லை இளிக்கிறார், பாதபூஜை செய்கிறார்.

கம்யூனிஸ்டு;—இங்குலாப்ஜிந்தாபாத்! யாரைப் பார்த்து இப்படி எல்லாம் பேசுகிறாய்...

காங்கிரஸ்;—சும்மா ஆத்திரப்படாதே செங்கொடி! சோவியத் நாடு, கம்யூனிஸ்டுகளை நம்புவதாலே காதற்ற ஊசியும் கிடைக்காது, இந்தியாவிலே அதுகளுக்குத் துளியும் செல்வாக்குக் கிடையாது, நேரு பண்டிதரிடம் தான் 'சாவி' இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு விட்டார்கள். அதனாலே தான், இவ்வளவு உபசாரம், வைபவம்.

கம்யூனிஸ்டு:—உண்மை தெரியாமல் உளறுதே! ஏன். இவ்வளவு உபசாரம் தெரியுமா! இத்தனை விருந்து ஏன் தெரியுமா! வைபவம் ஏன் என்பது தெரியுமா? உங்க நேரு பண்டிதருக்கு இதிலேஎல்லாம் ஆசை என்பது தெரியும் — இந்த ஆசையைத் தெரிந்துகொண்டு அமெரிக்கா நேருவுக்கு விருந்து உபசாரம் நடத்தி மயக்கி, முதலாளி முகாமிலேகொண்டுசேர்த்தது —இதை அறிந்த சோவியத் ஓஹோ! இந்த ஆசாமிக்கு இப்படிப்பட்ட விருந்து, உபசாரம், வரவேற்பு இவைகளிலே சபலம் இருக்கிறது, இதை அமெரிக்கா பயன்படுத்தி நேருவை முதலாளி கூடாரத்தில் சேர்க்கிறது, நாமும் அதேபோல விருந்து நடத்தி நேருவை இந்தப் பக்கம் அழைத்துக்கொள்ளலாம் என்ற பிரத்யேக ராஜதந்திரம் இது, தெரியுமா! சோவியத்தில் நேருவுக்கு நடக்கும் ராஜோபசாரம், நேருவுக்காக அல்ல, அவருடைய செல்வாக்கைக் கண்டு சொக்கிப் போனதால் அல்ல, விருந்து உபசாரம் நடத்தி நேரு போன்ற தலைவர்களை வலையில் விழச்செய்யும் அமெரிக்க ஏகாதிபத்யத்தின்மீது வீசப்படும் அணுகுண்டு, இது, தெரியுமா......

காங்கிரஸ்:—அடா, அடா! என்ன தெளிவு! அபாரமான அறிவு! போய்யா, வாயை மூடிக்கொண்டு.

கம்யூனிஸ்டு:—அதிகம் பேசவேண்டாம், சோவியத் இந்திய நேச உறவுக்கு நாசம் விளைவிக்க வேண்டாம், எச்சரிக்கிறேன், காம்ரேட், எச்சரிக்கிறேன்.

காங்கிரஸ்:—உன் எச்சரிக்கையை, யாரய்யா சட்டைசெய்வார்கள், நீ, எந்த நாட்டை 'ஞானபூமி' மூலபலக்கோட்டை என்றெல்லாம் கூறிவந்தாயோ, அந்த சோவியத்தில் உன் கட்சித் தலைவர்கள் போனபோது' ஏன் என்று கேட்பதற்கு நாதியில்லை, ஏறிட்டுப் பார்ப்பதற்கு ஆள் இல்லை, வெட்கமில்லை, உங்களுக்கு. தத்துவம் பேசுகிறீர்களா. தத்துவம்,

கம்யூனிஸ்டு:—காம்ரேட்! காம்ரேட், கோபத்தைக் கிளறி, பாண்டுங் முடிவைப் பாழ்படுத்தாதீர்......

காங்கிரஸ்:—கோபாலனும் கோவிந்தனும் ஆனந்தனும் அஜீசும், இப்படி ஒருவர்பின் ஒருவராகக் கிளம்பிப்போய் வந்தார்களே, உங்க கட்சியில், ஆத்திரமில்லாமல் பேசு, சட்டை செய்தார்களா, சோவியத்தில்!

கம்யூனிஸ்டு:—அது வேறுவிஷயம்... ........

காங்கிரஸ்:—வேறுவிஷயமா! வேறுவிஷயம்! வெட்கக்கேடு, போய்யா, போ. கம்யூனிஸ்டு கட்சியாலே துரும்புக்கும் பிரயோஜனமில்லை என்பதைத் தெரிந்துகொண்டு நேருவைச் சுற்றி வட்டமிடுகிறார்கள் உங்க சோவியத் தலைவர்கள்!

கம்யூனிஸ்டு:—நீர் பேசவில்லை, காம்ரேட்! பேசுவது நீரல்ல, டல்லஸ் பேசுகிறான்! டல்லஸ் ஒழிக! அமெரிக்க ஏகாதிபத்யம் ஒழிக!!

★

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 13 ] 19—6—55 [ இதழ் 50

# நல்ல அறிகுறி ஆனால்.....!

—[]—

வேலையில்லை, பலருக்கு வேதனையான நிலை.

ஆலைகள், இல்லையே, இங்கு.

என்று இந்தக்கிழமை, சென்னை வர்த்தக சபையினர், காமராஜர் அரசுக்கு அறிக்கையொன்று சமர்ப்பித்துள்ளனராம்.

நாடாளும் கட்சியின் நண்பர்கள் நிரம்பிய குழாம், சமர்ப்பித்திருக்கும் அந்த அறிக்கையில்,

"தென்னாட்டை இந்திய சர்க்கார் கவனிப்பதில்லை.

வடக்கில் போடப்பட்டிருக்கும் திட்டங்களில் சிலவாவது, இங்கு போடப்பட வேண்டும்.

அப்போதுதான், தெற்கும் வாழமுடியும். இல்லையென்றால், என்றும் முன்னேறாமல் பின்தங்கிய நாடாகவேண்டியதுதான்."

என்று, எச்சரித்துள்ளனராம். அதுபோதுதான், தலைப்பில் தந்த வாசகங்கள் மூலம் நாட்டின் நாடியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வர்த்த சபையினர் மட்டுமல்ல, சென்னை மாநிலத்தின் 62-நகராட்சி மன்றத்தவர்கள், தேசியத் தலைவர்கள், ஆலை வளர்ச்சிக்கும் ஒரு நாட்டின் மலர்ச்சிக்கும் இடையிலே உள்ள ஒற்றுமையை உணர்ந்தவர்கள், பாராளுமன்றத்தினர் — இப்படி, பற்பலர்! பற்பல துறைகளில் உள்ளோர்! — இதுபோது, எச்சரிக்கை செய்யத் துவங்கியிருக்கிறார்கள்.

தேயும் தெற்கு! வாழும் வடக்கு!! —என்று நாம் சொன்னபோது, விழிகளை விரிவாக்கிக்கொண்டோர்; வீண் கூச்சல் என்று வர்ணித்தோர்; இதுகள் என்றோர்; எவராயினும், இன்றுவரை, மறுக்கவில்லை —வடநாட்டைவிடத்தெற்குத்தேம்பும் நிலையிலிருக்கிறது என்கிற உண்மையை மறுக்க முடிந்திருந்தால்—மித்திரன், சித்திரம் தீட்டாது! இந்து, தலையங்கம் எழுதாது! தினமணியும் ஓசை எழுப்பாது! உண்மை, இப்போதுதான், அவர்கள் மனதிலும் உறைக்க ஆரம்பித்திருப்பதால், எடுத்துச் சொல்லத் துவங்கியிருக்கிறார்கள். இரட்டிப்பு மகிழ்ச்சி, நமக்கு—விழிப்பு இப்போதாவது, ஏற்பட்டதே என்பதால்.

இந்த விழிப்புணர்ச்சியின் விளைவாகக் காமராஜர் அரசும், டில்லியிடம் வலியுறுத்தி இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சில திட்டங்களைச் சேர்க்கும்படி கூறி வருவதாகத் தெரிய வருகிறது. இந்நிலையில், அறிக்கை சமர்ப்பித்த வர்த்தக சபையினர், ஆட்சியாளர் பார்வைக்குச்சில திட்டங்களையும், அளித்துள்ளனர்.

துறைமுக வளம் கொண்டது, தெற்கு. ஆகவே, என்னூரில் ஒரு கப்பல் தொழிலாலை கட்டலாம்.

எஃகு இரும்பு உற்பத்தியில்லாதது, பெரிய குறை தென்னாட்டுக்கு. அது, தீர்க்கப்படவேண்டும்.

சைக்கிள், மோட்டார் 'டயர்களை' உற்பத்தி செய்யலாம்.

காகிதம் தயார் செய்யலாம்.

சர்க்கரை ஆலைகள் அமைக்கவும் வசதியுண்டு.

கைத்தறிக்கு வேண்டிய சாயப்பொருள்களைத் தயாரிக்க முடியும்.

உலகுக்கே தோல் ஏற்றுமதி செய்யும் இடமாதலால், பதனிடும் ஆலையும் அமைக்கலாம்.

அதுமட்டுமின்றி, இப்படிப்பட்ட ஆலைகளுக்கான இயந்திரங்களைச் செய்யும், ஆலையும் கட்டலாம்.

வர்த்தக சபையினரின் ஆலோசனைகள், இவை! அவர்கள் சமர்ப்பிக்கும், இந்தப் பட்டியலை, எவரும் மறுக்க முடியாது. இவையாவும், தேவை, இந்த இயந்திர யுகத்தில் —ஒரு நாடு, வாழ! அப்போதுதான் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் — மக்களுக்கு வேண்டிய பொருள்களும் மலிவாகக் கிடைக்கும்—வாழ்வும் மணம் பெறும்! வளரும் உலகில், ஒரு பூமிக்கு, இயந்திர வளர்ச்சி எவ்வளவு அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. வர்த்தக சபையினர் யோசனைகள் தந்திருக்கும் இந்த நேரத்திலே, சென்னை சர்க்காரின் கைத்தறித் தொழில் இலாகா காரியதரிசியான மணி என்பார், சென்னை ரோடரி சங்கத்தில் பேசியபோது, தென்னாட்டில் என்னென்ன தொழில்களைத் துவக்க முடியும், என்பதை வெளியிட்டிருக்கிறார்.

- பழுப்பு நிலக்கரி எடுப்பு
- அலுமினியம் தயாரிப்பு
- மின்சாரக் கருவிகள்
- காகிதம்
- நூற்புமில்கள்
- சர்க்கரை ஆலைகள்
- பீங்கான், சிமெண்டு
- டைப்ரைட்டர்கள் தயாரிப்பு
- கண்ணாடிப் பொருள்கள்
- 'ஆபரேஷன்' கருவிகள்

இப்படிப்பட்ட ஆலைகள், லாபத்தோடு, நடைபெற முடியுமாம் இங்கே! வாய்ப்பும் வசதியும் உண்டென அறிவிக்கிறார், அவர்! இது தவிர, வேறுசில குடிசைத் தொழில்கள் மூலம், கிராம மக்களுக்கும நிவாரணமளிக்கலாம் என்றும் தெரிவிக்கிறார். எனவே, ஆலைகளை அமைக்கும் வசதியும் உண்டு! அவைகளை லாபத்தோடு நடாத்தவும் இயலும்!! ஆனால், அப்படிச் செய்வதற்கான அதிகாரமும் பணவசதியும் நம்மிடம் இல்லையென்பதையும், வடக்கு இந்த விஷயத்தில் எப்படி நடந்து கொண்டு வருகிறதென்பதையும், 'நம்மைவிட' அவர்கள் உணர்ந்துள்ளார்கள். இல்லையெனில் வர்த்தக சபை, 'பல்லவி'களோடு அறிக்கையை ஆரம்பித்திருக்க வேண்டியதில்லை! அதிகாரி மணியும், "உற்பத்தி சாதனங்களான தொழிற்சாலைகள், சில இடங்களில் மட்டும் குவிந்துவிடக் கூடாது. அவை, பரவலாக இருந்தால்தான் தொழில் வளர முடியும்" என்று சூசகமாக—அவர், அதிகாரியாதலால்!—தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

இந்த உண்மையை அனைவரும் அறிகிறார்கள்.

அதனால் தான், 'வடக்கும் தெற்கும்' என்று பேசவும் ஆரம்பிக்கிறார்கள்.

இப்படி இங்குள்ளோர் பேசும்

## நீரில்லாத ஆறு! வகையிலாச் செலவு!!

—★—

"செங்கற்பட்டுக்கும் மதுராந்தகத்துக்கும் இடையில், பாலாற்றில், கட்டப்பட்டிருக்கும் இந்தப் பாலம், மொத்தம் **26**-லட்ச ரூபாம் செலவில் கட்டப்பட்டிருக்கிறது."

—செய்தி,

*

"ஆற்காட்டுக்கும் ராணிபேட்டைக்கும் இடையில், பாலாற்றில் ஒரு பாலம் கட்டப்படுவதற்காக கல் நாட்டு விழா நடைபெற்றது. பல லட்ச ரூபாயில், திட்டம் போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது"

—செய்தி.

* * *

மந்திரி மாணிக்கவேலர்:—தண்ணீரே ஓடாத ஆற்றுக்கு, பணம் செலவழித்து, இப்படி பாலம் கட்டவேண்டுமா என்கிற சந்தேகம் ஜனங்களுக்கு உண்டாகலாம். எனக்கும் அப்படி ஒரு சந்தேகம், ஏற்படத்தான் செய்கிறது.

போது, வடக்கே இருப்பவர்கள் வாதாட வருவதும், 'வடக்காவது, தெற்காவது!' என்று சொல்லுவதும் சகஜம். இலாபம் பெறுவோர்—சாகசம் பெறுவோர்—அவர்கள். ஆனால், 'நம்ம' அளகேசன் உள்ளாரே—இரயில்வே உதவி மந்திரி—அவர் சொன்னாராம் ஓரிடத்தில், "வடக்கு, தெற்கு என்று பார்த்து நாங்கள் திட்டம் போடுவதில்லை. இந்தியா முழுமையுமே, எங்கள் கண் முன் தெரிகிறது. வடக்கு, தெற்கு என்று பேசுவதெல்லாம் சரியல்ல" என்பதாக. சபாஷ்—என்று தட்டுவர், அவரது டில்லி சகாக்கள். பதவி பாபம் அவரை இவ்விதம் பேசச் சொல்லுகிறது. இதுபோல பதவியின் காரணமாக ஊமை நிலையிலிருப்போர் தொகை—அதிகம். அதிலும், டில்லி பீடத்தின் கைலாகும், அரவணைப்பும் பெற்றோரின் போக்கே இதுதான். இல்லையென்றால் கிருஷ்ணமாச்சாரியார், 'இரும்பாலை அமைக்கச் சேலம் இலாயக்கில்லை' என்று சொல்வாரா!

# மாம்பழமும் - மாம்பலமும்!

(சொல்லாதது)

"நான் இங்கு 'தூதுவராக' இருந்து, திறமையுடன் பணியாற்றியதன் பலனாகத்தான் நேருவுக்கு இவ்வளவு ராஜோபசாரம் கிடைத்தது"

—K. P S மேனன்.

"நான் சென்ற ஆண்டு, சுற்றுப் பயணம் செய்து சோவியத் மாண்புகளுக்குப் பாராட்டுத் தெரிவித்து, நேசப்பான்மை வளர வழி செய்ததால் தான், அப்பாவுக்கு அமோகமான வரவேற்பு ரஷியாவில்."

—இந்திரா நேரு.

"ஜினிவா, மகாநாட்டுக்குப்பிறகு நான் நேருவின் நிலையைப் பற்றி விளக்கிச் சொல்லி, அவருடன் தொடர்பு கொள்வது எவ்வளவு நல்லது என்பதை எடுத்துக் காட்டிய பிறகு தான், சோவியத் தலைவர்கள், நேருவுக்கு இப்போது விருந்துபசாரம் நடத்தி மகிழ்விக்கிறார்கள்."

—சோ—இன்—லாய்.

"பாரிஸ் பாண்டுங், பக்தாத் பெர்லின், ஜினிவா இலண்டன், பீகிங் டில்லி, நியூயார்க் ஹாங்காங், என்று இப்படி எல்லாத் தலைநகர்களிலும் சென்று, சாமர்த்தியமாகப் பேசி, ராஜதந்திர வெற்றிகளைப் பெற்றுத் தந்தபடி இருப்பதால் தான், நேருவுக்கு ரஷியாவில் இவ்வளவு மகத்தான செல்வாக்குப் பூத்திருக்கிறது."

—கிருஷ்ணமேனன்.

"உலகப் பிரச்னைகளைப் பற்றிக் கலந்து பேச நாம் ரஷியாவுக்கு அழைப்பு அனுப்பியதனால், மகத்தான மனமாறுதல் ஏற்பட்டதால், ரஷியா இப்போது நேசமுகம் காட்ட முன்வந்தது. அதன் பலன் தான், நேருவுக்குக் கிடைக்கும் வரவேற்பு வைபவம்."

—சர்ச்சில்.

"பாண்டுங்கில் வெற்றிகரமாக மாநாடு நடத்தியதால் தான், மன மகிழ்ச்சி ஏற்பட்டு, ரஷியா இப்போது நேருவை வரவேற்று உபசரிக்கிறது."

—ஜோஜோ.

"எனக்குக் கோபமும் சந்தேகமும் வரவேண்டும் என்பதற்காகத் தான் ரஷியா, நேருவுக்கு அமர்க்களமாக உபசாரம் நடத்துகிறது."

—ஐசனோவர்

"என்னைச் சந்தோஷப் படுத்துவதற்காகவே என் நட்பைப் பெற்ற நேருவுக்குரஷியா வரவேற்பளித்துக் கொண்டாடுகிறது."

—டிட்டோ.

"நம்மை வரவழைத்து உபசாரம் செய்து மயக்கலாம் என்ற நோக்கத்தால் தான் ரஷியா, நேருவுக்கு 'மேளா' நடத்திக் காட்டுகிறது."

—முகமதலி.

"அசடர்களே! எல்லாம் என்னால்! அணுகுண்டுகளைக் கடலில் போடச் சொல்லி நான் அமெரிக்காவை மிரட்டினேன்! அமெரிக்காவிடமிருந்து 'உதவி' பெறக்கூடாது என்று சர்க்காருக்கு எச்சரிக்கை விடுத்தேன். அதை எல்லாம் கவனித்த ரஷியா, தன் மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ள இப்போது நேருவுக்கு வரவேற்பு வைபவம் நடத்தி, நன்றி தெரிவித்துக்கொள்கிறது."

—ஆச்சாரியார்.

"ஒருவருக்காவது உண்மை இரகசியம் தெரியக்காணோம்! எல்லாம் என் மகிமை! என் திறமை!! என்னிடம் மனதைப் பறிகொடுத்ததால் தான் சோவியத் தலைவர்கள் இவ்வளவு சரசபுருஷர்களாகி நேரு பண்டிதருக்கு அருமையான வரவேற்பு அளித்தனர்."

—மார்பரும்.

'இந்தியா முழுவதும்' என்று அளகேசனல்ல, சாதாரண 'மார்வாடி' கூடச் சொல்லுகிறார்—அப்படி இந்தியா முழுவதும் தெரியும்போது, வடக்குமட்டும் தெரிவானேன்? தெற்குமட்டும் கண்ணிற்படாமல் இருப்பானேன்? குருட்டுநிலை—கண்ணுக்கா? கருத்துக்கா? சேலம் இரும்பு, நெய்வேலி நிலக்கரி இரண்டும் அருகருகேயிருந்தும், ஒரு இரும்பாலைக்கு அனுமதியில்லை! அதோ, டாடா, 50 கோடி ரூபாயில், திட்டம் தீட்டுகிறார், ஆலையைப் பெரிதாக்க. எனவே, இப்படி 'ஏக இந்தியா' பேசுவோர், நிலைமையையும் பதவியையும் அனுசரித்துப்பேசுகிறவர்களாயிருக்கிறார்கள். அந்நிலையிலிருந்து இறங்கிவிட்டால், அவர்களும், உண்மையைப் பேச ஆரம்பித்துவிடுவார்கள்!!

வர்த்தக சபை, யோசனைகள் தருகிறது—வர்த்தகம் செய்யத் துறைமுக வளம் உண்டே, இந்தியாவிலேயே ஏராளமான துறைமுகப் பட்டினங்கள் இங்கேதானே இருக்கின்றன—இன்னின்ன ஆலைகள் அமைக்கலாமே, இப்படியான வசதிகள் உள்ளனவே—என்று கைத்தொழில் இலாகாவிலிருக்கும் அதிகாரியும், பட்டியல், தருகிறார்.

வடக்கிடமிருந்து நீதி பெற வேண்டுமென்பதில், நாடும் நல்லறிவாளரும் ஒரே நோக்கம்கொண்டுள்ளனர். நாட்டைச் சோலையாக்க விரும்பும், பொதுவாழ்வினரின் ஆதரவும், பூரணமாக உண்டு. திட்டங்கள், தீட்டித்தரும், அதிகாரிகளும் இருக்கின்றனர்! அவர்கட்கு உதவிகள் புரிய அறிஞர் பலரும் உண்டு தெற்கே!! ஆனால், மனம் தான் இல்லை, மத்யபீடமாம். டில்லிக்கு. இருதயம் பூட்டப்பட்டுவிடுகிறது, இந்த விஷயத்தில்! அதனைத் திறந்திடும் மார்க்கம் காண வேண்டும, காமராஜர் சர்க்கார்.

நாட்டைக் காட்டிக் கேட்கலாம்—நல்லறிவாளரின் அறிவுரைகளைக் காட்டி கேட்கலாம்.

அதிலும் ஓமாந்துராருக்கோ, குமாரசாமிராஜாவுக்கோ, இல்லாத பல வாய்ப்புகளைப் பெற்றிருப்பவர் காமராஜர் — ஆட்சிச்சபையிலும், மேலிடத்திலும்.

அவைகளைப் பயன்படுத்தி, தென்னாடு வாழும், திட்டங்களை நிறைவேற்றவேண்டும்! ஆலைகுலுங்கும் நாடாக அமையவேண்டும், தெற்கு. நடக்குமா! என்று, ஐயத்தோடு, கேட்கிறோம் — காமராஜரிடம் அறிக்கை சமர்பித்த, வர்த்தக சபையினரையும், யோசனைகளை அள்ளிச் சொரிந்த கைத்தொழில் இலாகாக் காரியதரிசியையும்.

★

# பறக்கும் தட்டு

சீனா—டில்லி—லண்டன் — வாஷிங்டன் — என்று பறந்துகொண்டே இருக்கிறார், வி. கே. கிருஷ்ணமேனன்! டில்லி அமைச்சரவையில் அவரையும் சேர்க்க முயன்று, 'ஏதோ' காரணத்தால் இயலாமற்போயிற்றென்று செய்திகள் வந்தபிறகு, நேருவுக்கு அடுத்தபடி, கிருஷ்ணமேனன் தான்பறக்கும்தட்டுப்போல இருக்கிறார்! சீனாவில் சூ-இன்-லாயைச் சந்திக்கப் பாதுகாப்புடன் விமானப் பிரயாணம் — ராஜோபசாரம், ஈடனுடன் ஆலோசனை—ஐசனோவருடனும் உலக நிலைபற்றிய உரையாடலும், இப்படியிருக்கிறது. இவரதுவாழ்வு.இத்தனைச்செலவும், அவருடைய மகாந்தரச் சம்பாத்தியத்தில் இருந்து அல்ல. நமது வரிப் பணத்தில்தான்! விமான டிக்கட்டு முதல் ஓட்டல் செலவுவரை, யாவும் நமதுவரிப்பணத்தில்தான்! அமெரிக்க ஐசனோவருக்கு டல்லஸ், நிக்ஸன் போன்றோர் தேவைப்படுகிறார்கள், உலகமெங்கும் சுற்றி அமெரிக்க ஆதிக்கத்துக்கு செல்வாக்குத்தேட. ஆதிக்க ஆசையில்லாத நாடு, இந்தியா! ஆனால் நேருவுக்கும் ஒரு பிரதிநிதி தேவைப்படுகிறார், உலகம் சுற்றி, தன் பெயரை ஜபிக்க! இல்லையென்றால், கிருஷ்ணமேனன் எனும் செல்லப் பிள்ளை ஏன்? சீனாவில், தூதுவராலயம் உண்டு—லண்டனின் விஜயலட்சுமி —அமெரிக்காவில் மேதா, அனைவருக்கும், கோடிக்கணக்கான பணம், ஆண்டுதோறும் அழிக்கப்பட்டு வருகிறது! எதற்கெனக் கேட்டால், இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்குமிடையே, தொடர்பு உண்டாக்குவது அவர்தம் பணியாம். அதற்காக, ஒவ்வொரு அலுவலகங்கள்., ஒவ்வொரு தேசத்திலும்! இருந்தும், கிருஷ்ணமேனன், தேவைப்படுகிறார். ஏன்? அவர்கள் மீது, நேருவுக்கு நம்பிக்கையில்லையா! அவர்கள் எல்லாம் இதற்கு இலாயக்கில்லை எனும் கருத்தா!!

இப்படி நாட்டுக்கு நாடு ஒரு தூதரைவைத்துக்கொண்டு, அதே நேரத்தில் இன்னொரு ஆளை அனுப்பி 'அரசியல்' பேசுவது, ஒருவேளை நேருவுக்குத் தேவைப்படலாம். நாட்டின் நிதி நிலைமைக்கு ஒத்துவராது. அமெரிக்கா 'மார்க்கெட்' பிடிக்க ஆள் அனுப்பினால், நேரு, 'புகழ் மார்க்கெட்'டுக்கு ஒரு ஆளைத் தயாரில் வைத்திருக்கிறார். ஆனால், அமெரிக்காவிலுள்ளநியுயார்க் நகரத்தை இந்தியாவுடன் ஒப்பிட்டால் பூனையும் யானையும்! ஆனால், அதற்கு ஒரு ஆண்டில் வரும்வரித் தொகையைவிட யானையளவு பெரிய இந்தியாவுக்கு ஏழே மடங்கு அதிகமான தொகைதான் வரியாக வருகிறது! அதனால்தான், இந்தியாவை ஏழை நாடென்கின்றனர்—அனைவரும். ஆனால், ஏழை இந்தியாவோ, இப்படி செய்துகொண்டுள்ளது! கிருஷ்ணமேனன் பறந்துகொண்டே இருக்கிறார்!!


SANKARAN PROGRESSIVE TUTORIALS · TIRUCHI

S.P.T.

SANKARAN
PROGRESSIVE TUTORIALS
★ COLLEGE & HIGH SCHOOL ★
KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROAD
TEPPAKULAM P.O., TIRUCHIRAPALLI. ②

RE-OPENS: 10th JUNE 1955

S. S. L. C., INTER., B. A. etc.,
(All Parts & Groups)

The Greatest living poet,
BHARATHI DASAN
WILL TEACH YOU TAMIL!

Mrs. JUDITH LOUIS, B.A. (Hons) Vice-Principal.
N. J. DEVADAS, M. A., Principal.




தம்பி,

'ஏனேதானே' என்று அதுநாள்வரை இருந்து வந்தவள், மானே! தேனே! என்ற மயக்கமொழி பேசினன். அடிமூச்சுக் குரல் அன்பின் அறிகுறியாகமட்டுமல்ல, நம்பினேரை நாசமாக்கவும் பயன்படும் என்பதை அறியாத நாரிமணி, பூங்கொடி தென்றலால் ஆடுவதுபோலானள். புது வாழ்வு பிறந்தது என்று எண்ணிக்கொண்டாள். அவனே, அவளை இன்பபுரிக்கு அழைத்துச் செல்லவில்லை; அவளிடமிருந்த இருபது பவுன் 'செயினை'ப் பெற்றுக்கொண்டு, நடையலங்காரி ஒருவளை நாடிச் சென்ருன்!

கதை, தம்பி, கதை. காதலின்பம் பெறவேண்டிக் காரிகையர் சிலர் கருத்தழிவதைக் காட்டும் கதை.

"கொழந்தே! உனக்கு மிட்டாய் வேணுமா, ஊதாங்கோல் வேணுமா, ஆடும் குதிரை, பாடும் பறவை எல்லாம் வாங்கித் தரட்டுமா"

"மிட்டாயா, வாங்கிக்கொடுங்கோ மாமா, எனக்கு ரொம்ப இஷ்டம்"

"கடைத் தெருவுக்குப் போகலாம், வா, கண்ணு"

"ஐயோ! அம்மா அடிக்குமே, நான்போய் அம்மாவிடம் சொல்லிவிட்டு......"

"அம்மாவிடம் சொன்ஞ, உன்னை அனுப்பமாட்டாங்களே! மிட்டாய் தின்னப்படாதுன்னு சொல்லுவாங்க"

"அம்மாவுக்குத் தெரியாமெ, ஓடிப்போய், மிட்டாய் வாங்கிக் கொண்டு வந்துவிடலாமா?"

நஞ்சுநிறை நெஞ்சினன் என்பதறியாத அந்தப் பிஞ்சு, வயலோரத்தில் கசக்கிப் போடப்படுகிறது கையிலே மிட்டாய் இருக்கிறது—ஆனல் கைவளையும் காதுலோலக்கும் இல்லை.

திருவிழாக்களின்போது கேள்விப்படுகிரும், இதுபோன்ற நிகழ்ச்சிகளை

கனிமொழி, சுவையுள்ளதுதான், ஆனல் நஞ்சுக்கு அதனை உரையாகவிடும் போக்கினரும உண்டு—எனவேதான் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்கிருர்கள்.

அழகும் மணமும் கொண்ட செந்தாழை இருக்கிறது பார் தம்பி, அதிலே, இதழ்களின் இடையே, ஒட்டிக் கொண்டிருப்பதுண்டாம் சிறுநாகம்—தீண்டினல் தீர்ந்து போவார்களாம்! அதனல், அனுபவமுள்ளவர்கள், செந்தாழையைப் பிரித்தெடுக்கும்போது, 'ஜாக்ரதை'யாக இருக்கவேண்டும் என்பர்!

தம்பி! முரட்டுத்தனத்தினலே மட்டுமே, தீயகாரியங்களைச் சாதித்துக்கொள்வது என்ற முறை, இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டது—தீயகாரியம் குறையவில்லை! முறை மாறிவிட்டிருக்கிறது!

"கழட்டடி, கழுதே! உங்க அப்பன் வீட்டிலே போட்டா என்னவாம்? இப்ப கழட்டிக் கொடுக்கறயா, இல்லேயானு, இடுப்பை முறிச்சிக்கப் போறியா?"

இந்தக் 'கணவன்' இப்போது—

"என்ன செய்யறது; வேறெ எங்கேயும் கிடைக்கலேயாம், என் உயிரை வாங்கருன் வேலாசாமி. கலியாண வேலையை முடிச்சுகிட்டு, உடனே திருப்பிக்கொடுத்துவிடுகிறேன்னு கெஞ்சருன், பரிதாபமா இருக்கு; நம்மிடம் இருக்கவே, நானும் அவனுக்கு வேண்டியவனு இருக்கிறதாலே ஒரு நாலு நாளைக்கு இரவல் கொடுனனு கேட்கருன். இதுக்கு என்னமோ மூக்காலே அழறியே. எடு! எடு! கொடு! கொடு! நோமாவுது, ரயிலுக்கு" என்று பேசி நகையைப் பறித்துக் கொள்ளவும், அதைக் கிண்டி 'ரேசுக்கு'ப் பயன்படுத்தவும், பயிற்சி பெற்றுவிட்டான்!

முரட்டுத்தனமாக அவன் இருந்த போதாவது பரவாயில்லை, அடி உதை கிடைத்தாலும், அண்டை அயல் பஞ்சாயத்துக்கு வருகிற முறையில், அழுகுரல் கிளம்பி இருக்கும்; சிலவேளைகளில், அதற்கு அஞ்சி அவன், புற்றுக்குள் புகுந்துகொளளும் பாம்பாகி விடவும் கூடும்.

மானே! தேனே! என்று அவன் தித்திப்பு ஊட்டும்போது, பாபம், அவள் தப்ப வழியே கிடைக்காதல்லவா!

ஆதிக்கக்காரர்களின் போக்கிலே இபபோது இதுபோன்ற மாறுதல் ஏற்பட்டுவிட்டிருக்கிறது — இதன் பயனக ஆபத்தும் வளர்ந்துகொண்டிருக்கிறது.

புலி, உறுமும் — அந்தச் சத்தம் கேட்டு, கிலி பிறப்பினும், ஒரு படை திரட்டிவிடவும், அதை வேட்டையாடிக் கொன்றுபோடவும், வழியும் கிடைக்கக்கூடும். ஆனல், முல்லை பறித்திட மலர்த் தோட்டம் சென்று, பச்சைப் பட்டோ என்று பரவசப்படத்தக்க பசும்புற்றரையில் நடந்துசெல்லும்போது, அரவமின்றி ஊர்ந்துவந்து, தீண்டிடும் நாகமாக இருந்தால், என்ன கதியாவது?

ஆதிக்கக்காரர்கள் புலியாக இருப்பதாலே ஏற்படும் ஆபத்தை உணர்ந்துகொண்டு, இப்போது புற்றரைப் பாம்பாகி இருக்கிருர்கள்.

எல்லோருமே அவ்விதம் எப்போதுமே அவ்விதம், என்று சொல்லவில்லை; இப்போதும் பழைய முறையே சாலச் சிறந்தது என்று எண்ணும், போர்ச்சுசிய ஆதிக்கக்காரர் இருக்கத்தான் செய்கிருர்கள்—கொக்கரிக்கிருர்கள், சுட்டெரிக்கிருர்கள். ஆனல், குறிப்பிடத்தக்க அளவிலே, புலி, பாம்பாகிவிட்டிருக்கிறது.

கதை படித்திருப்பாயே, சிறு வயதில்.

பல்லின் கூர்மையும் நகத்தின் கூர்மையும் பட்டுப்போன கிழப்புலி, பாய்ந்து சென்று தாக்கி, பிய்த்து இரத்தம் குடித்துப் பசி தீர்த்துக் கொள்ளமுடியாது என்று தெரிந்து கொண்டு, தங்கக் காப்பைக் காட்டி ஆசையை மூட்டி, அருகே வருபவனை அடித்துத் தின்றது, என்றோர் கதை உண்டு.

பேராசைக்காரப் பார்ப்பானொருவன், இப்படி ஒரு கிழப்புலியிடம் சிக்கிக்கொண்டான் என்பது கதை.

பேராசைக்காரப் பார்ப்பான் என்று சொல்லக்கூட இந்தச் சர்க்காரிலே அனுமதி கிடைக்காதுபோலிருக்கிறது, தம்பி! இதற்கோர் கண்டனக் கூட்டம் போட்டு, இருபதாந் தேதி மாரடித்தழுவோம் என்று 'இந்து' தீர்மானித்துவிடக்கூடும்! நாடு அவ்வளவு முன்னேறிவிட்டிருக்கிறது, 'நம்ம காமராஜர்' என்று சொல்லிச் சொல்லி நாக்குக்கூடத் தழும்பேறிவிட்டிருக்கும்; எனினும், 'அவர்களின்' போக்கிலே மாறுதல் காணோம்.

அது கிடக்கட்டும் — அந்தப் பிரச்னை தீர, விருதுநகர் வித்தகரிடமா மருந்து கிடைக்கப்போகிறது!!

ஆதிக்கக்காரர்களின் போக்கிலே ஏற்பட்டு வரும் மாறுதலைக் கூர்ந்து கவனித்தவண்ணம் இருக்கவேண்டும் என்பதைக் கூறத்தான் விரும்புகிறேன், தம்பி! இடையே, இந்தச் சர்க்கார் கவனம் வந்தது; விட்டுத் தள்ளு.

சென்னையில் ஒரு பகுதிக்கு Black Town, கருப்பர்ஊர் என்றே துணிந்து பெயரிட்டனர், வெள்ளையர்!

அது, கொடுக்கிறாயா, கொல்லட்டுமா என்று கேட்கும் நிலை.

பிறகு, கருப்பர் பட்டினம் ஜார்ஜ் டவுன் என்றாயிற்று — வேலாசாமி இரவல் கேட்கிறான் என்று புளுகி, நகையைப் பறித்த கட்டம் போன்றது.

கருப்பர்—இன்று, அன்பர், நண்பர், தோழர், என்றெல்லாம் ஆகிவிட்டது!

ஏகாதிபத்யம் போக்கை மாற்றிக் கொண்டது — நீதி, நேர்மை, நியாயம் இவைகளுக்காகவா, செச்சே! அதற்கல்ல; நோக்கம் நிறைவேறப் பழையமுறை உதவாது என்று புரிந்துவிட்டதால்.

திராவிடத்தைத் தமது ஆதிக்கத்துக்கு உட்படுத்திக் கொண்டுள்ள வடநாட்டுத் தலைவர்கள் சிலர், வரலாறு காட்டும் இந்த நிலைமைகளை நன்கு அறிந்து கொண்டிருக்கிறார்கள்; எனவே அவர்கள், அச்சமூட்டுவதால் பலனில்லை, ஆசை காட்டவேண்டும் என்று புரிந்துகொண்டு செயலாற்றத் தொடங்கியுள்ளனர்.

காட்டு மிருகங்களை வேட்டையாடுவதுபோல நாட்டு மக்களைச் சுட்டுத் தள்ளிய வெள்ளைக்காரனே, காலம் தெரிந்து, கருத்தை மறைத்திடவும், கனிமொழி பேசிடவும் கற்றுக்கொண்டான் என்றபோது, 'அதிர்ஷ்டப் பரிசு'ச் சீட்டு வாங்கியவனுக்கு ஆறு இலட்சம் கிடைத்ததுபோல, களத்தில் கடும் போரிட்டு அல்ல, வீரதீரத்தைக் காட்டி அல்ல, நமது கோட்டைகளைத் தாக்கித் தகர்த்து கொடிமரங்களை வெட்டி வீழ்த்தி, நம்மைப் புறமுதுகிட்டோடச் செய்து அல்ல, வெளியேறிய வெள்ளையனுடைய கண் பார்வையில் இருந்த ஒரே காரணத்தால், திராவிடத்தை ஆளும் நிலையை வடநாட்டுத் தலைவர்கள் பெற்றனர்—அப்படிப்பட்டவர்கள், கனிமொழி பேசித்தான் காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டும் என்று முறை அமைத்துக்கொள்வதிலே ஆச்சரியம் என்ன இருக்கிறது.

வெள்ளையன் இங்கு நுழைந்த நாளிலிருந்து வெளியேறிய நாள் வரை, நடைநொடி, பாவனை, மதம் மொழி, வாழ்க்கை வழி ஆகிய எல்லாவற்றிலும் தான் வேறுபட்டவன்மட்டுமல்ல, மேம்பட்டவன் என்று நம்பிக்கொண்டிருந்தான், கூசாமல் சொல்லியும் வந்தான்.

வடநாட்டுத் தலைவர்கள் அப்படியல்ல, — காங்கிரசின் துணைகொண்டு, 'பந்தம் பாசம்' இருப்பதாகச் சொல்லி, பாரததேசம், பாரதமக்கள், இந்தியர் என்ற இனிப்புப் பண்டமளித்து, திராவிடரை மயக்கிவைத்திருந்தனர். நாடகங்களிலே பார்க்கிறோமல்லவா இருவகையான கொலைக் காட்சிகள்—ஒன்றில், வாள் வாளைச் சந்திக்கும், இரத்தம் கொட்டப்படும், ஓடி ஓடிப் போரிடுவர், உயர இருந்துக் கீழே குதிப்பர், கூடம் களமாகும், எதிரே இருக்கும் சாமான்கள் உடைபடும், கடைசியில் ஒரு கொலை! மற்றோர் வகையிலே, வாள் உறையிலே தூங்கும், வாட்கண் அவன் நெஞ்சத்தைத் துளைக்கும்; அவள் இடை அசையும், இவன் இதயம் விம்மும்; அவள் கடைகாட்டுவாள் இவன் கருத்திலே ஏதேதோ கொந்தளிக்கும்; கண்ணாளா! என்பாள்; இவன் கட்டிக் கரும்பே! என்பான்; மாமோகம் கொண்டேன் என்பாள், இவன் கனவல்லவே கட்டழகி! என்று குழைந்து கூறுவான்; அவள் புன்னகை புரிவாள், இவன் புத்தி தடுமாறும்; அவள் இதோ கனிரசம் என்று அளிப்பாள், அவன் அவள் கரம் தொட்டு அதைப் பெற்றுப் பருகுவான்; கண்ணிலே ஒரு திரை போடுவது போலாகும், கால் நடுக்குறும், அழகால் அறிவு தரும் ஆரணங்கை ஆசையுடன் பார்த்தபடி அருகே நெருங்குவான், அவள் 'இலாவகமாக' ஒதுங்கிக் கொண்டு ஒரு பசப்புச் சிரிப்பொலி கிளப்புவாள், இதற்குள் இவன் பார்வை மங்கும், பூமியில் கால் பாவாது, கீழே சாய்வான், பிணமாவான்!

தென்னாட்டவர், தீரர், வீரர், தேசபக்தர்!

தென்னாட்டவர், எந்நாட்டவரும் வியக்கத்தக்க நுண்ணறிவு படைத்தவர்கள்; எதையும் சாதிக்க வல்லவர்கள், எத்துணை கஷ்டத்தையும் பொருட்படுத்தாதிருக்கும் நெஞ்சுரம் கொண்டவர்கள்.

தென்னாட்டவருக்கு எத்தனை மொழி கற்பதானாலும், சிரமமிராது —பாண்டித்யம பெற முடியும்.

தென்னாட்டவர் இந்தியைக் கற்பதுமட்டுமல்ல, வெகு விரைவில் வடநாட்டுக்கே இந்தி ஆசிரியர்களாகிவிடக்கூடிய, திறமைசாலிகள்!

தென்னாடு! அறிவாளிகள் நிரம்பிய இடம்!

எல்லாக் கலையும் கொஞ்சிவிளையாடும் பூந்தோட்டம் தென்னாடு!

அன்புக்குப் பிறப்பிடம் தென்னாடு!

அழகிய மங்கையரின் முகவிலாசமும், அறிவாளர்களின் முகதேஜசும், இயற்கை எழிலுடன் சேர்ந்து, தென்னாட்டைக் கந்தர்வபுரியாக்குகிறது!

தென்னாட்டின் அருமைபெருமைகளை அறியாதார் அறியாதாரே!

முல்லை காட்டி, பாகுகலந்த

சொல்லமுது ஊட்டி, பாவை பம்பரமாக ஆட்டிவைக்கிறாள்!

மாவ்லங்கர், தத்தர், தேபர், மகதாப், என்று வந்தவண்ணம் இருக்கிறார்கள் வடநாட்டுத் தலைவர்கள், இத்தகைய மயக்க மூட்டும் நோக்குடன்.

ஒருவர் இயற்கை வளத்தைப் புகழ்கிறார், இன்னொருவர் மொழி வளத்தைக் கண்டு வியப்படைகிறார், தேசசேவையைப் பாராட்டித் தேன் கொட்டுகிறார் ஒருவர், தெய்வ பக்தி மிகுந்த இடமல்லவா என்று பரவசம் பாய்ச்சுகிறார் இன்னொருவர், அனைவருக்கும் ஒரே நோக்கம், ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்வது என்பதுதான்! அதற்கு ஆர்ப்பரிப்புப் பலனில்லை, அன்பு ஆலாபனமும், புகழ்ப் பல்லவியும் 'தாஜா' செய்யும் தாளமும் தேவை என்பது முறைபாக்கப் பட்டிருக்கிறது.

பன்னெடுங்காலமாகவே திராவிடர், இப்படிப் பசப்புவோரிடம் நம்பிக்கை வைத்து நாசமாகி இருக்கிறார்கள். இல்லையானால், காய்ந்த புல்லைக் கையிலே கொண்டிருந்த கூட்டத்திடம் கட்கமேந்திப் போரிடுவதைக் காதலுக்கு ஈடான நிலையில் வைத்துப் புகழ் ஈட்டிய திராவிட இனம், அடிமைப்பட்டிருக்கவே முடியாதே!!

வடநாடு, ஒழுங்கு முறைக்கு உட்படுத்தப்படாமலிருந்த நாட்களிலேயே, இங்கு திராவிடம் ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒழுக்கத்தை ஓம்பிவளர்த்திடும் திருநாடாக இருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன.

செல்வம் கொழிக்கும் நிலையும் செங்கோலோச்சும் மன்னர்களும் பெற்ற நிலையில், வடநாடு சித்தரிக்கப்படும் கட்டத்தைக் கூட வேண்டுமானால், திராவிட நாட்டு வரலாற்றுச் சம்பவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கச்சொல்லு, தம்பி, திராவிடத்தின் தனிச் சிறப்பு விளக்கமாகத் தெரியும்.

மன்னர் இருந்தனர், இங்கும் அங்கும்; மணிமுடி இருந்தது இரு மன்னர் முடியிலும், எனினும், இரு வேறு முறையன்றோ காண்கிறோம் அவர் தம் போக்கில்.

மக்களுக்காக அரசு, அரசு செம்மையாக நடந்துவர மன்னன், என்பது திராவிடத்தில், தத்துவமாகமட்டுமல்ல, திட்டமாக இருந்து வந்தது அந்த நாட்களிலும், மன்னன் செம்மையாக் வாழ ஒரு அரசு, அந்த அரசு வளமுடன் இருக்க மக்களின் உழைப்பு என்ற தன்மை இருந்துவந்தது, வடக்கில்.

வெட்டிப் பேச்சல்ல, தம்பி, மன்னன் தன்னிடம் அரசாளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் கருதிப் பணியாற்றினான் இங்கு. அங்கு அங்ஙனமல்ல! நாடு, மன்னன் உடைமை! அதன் பயனைப் பெறும் அனுமதியை மன்னன் மக்களுக்கு அளிக்கிறான், அங்கு. எனவேதான் காண்கிறோம், நாடு, மன்னனால் எப்படி வேண்டுமானாலும் ஆக்கப்பட்டுவிடும் அக்ரமத்தை!

கேகயன் மகள் ஒரு கோகிலம்! தசரத மன்னன் நரைத்த தலையினன்!! அங்கம் தங்கம், அந்த அரசிளங்குமரிக்கு; உடலெங்கும் காலம் தந்த சுருக்கம் இந்த அரசனுக்கு. எனினும் அந்தச் சிற்றிடைச் சிங்காரியைச் சரசக் கருவியாகக்கொள்ள வேண்டுமென்று இந்த சத்திழந்தவர் விரும்பினார்—என்ன செய்தார். என்னைக் களிப்பிக்கும் தொண்டுபுரிய இந்தத் தோகை இசையட்டும், நான், அவள் வயிற்றில் உதிக்கும் மகனுக்கே, என் 'ராஜ்யத்தை'த் தருகிறேன்—இப்போதே, இதோ என் ராஜ்யத்தைத் தந்துவிடுகிறேன் என்று வாக்களிக்கிறான்.

வயோதிகருக்கு அந்தக் கணை புகுந்தால், கருத்து எப்படி ஆகிவிடுகிறது என்பதைக் கவனிக்கச் சொல்லவில்லை — இதை அறிய இராமாயண காலத்துக்கா போக வேண்டும், நமது நாட்களிலேயே பார்க்கிறோமே!!

கொடுத்த வாக்குறுதியை தசரதன் காப்பாற்றாதது குற்றமல்லவா என்று 'இராமதாசர்களை'க் கேட்கும்படிக்கூடச் சொல்லவில்லை —இதைவிட காரசாரமான கேள்விக் கணைகளால் தாக்குண்டு அவர்கள் வைகுண்ட வாசனிடம் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நான் உன்னைக் கவனிக்கச் சொல்வது, எது தெரியுமா தம்பி, தசரதன் தன் ஆட்சியில் இருந்து வந்த இராஜ்யத்தை, தன் இஷ்டப்படி யாருக்கு வேண்டுமானாலும் தர முடிகிறது.

இது வடநாட்டில்தான்; இங்கு இது போல் நடைபெற்றதில்லை.

சூதாடித் தோற்கிறான் இராஜ்யத்தை—நளன்—தருமன்.

தானமாகக் கொடுத்துவிட்டுச் சுடலைகாக்கச் செல்கிறான் அரிச்சந்திரன்.

இவை வடநாட்டு மன்னர்களின்

## 'நம்ம அண்ணன்' குடும்பம்!

"சின்ன பொண்ணு! எங்கே உங்க அப்பன்?"

"அப்பாவை போலீசு கூட்டிகிட்டுப் போச்சு..."

"போலீசா! ஏம்புள்ளே! எதுக்காவ......"

"போருதவேளை பெரியப்பா! வேறே என்ன...பண்ணையாருக்கு என்னமோ கோவம், அப்பன் தேங்காயைப் பறிச்சு வித்துப் போட்டாருன்னு போலீசுக்குச் சொல்லிப் புட்டாரு......"

"அன்யாயமாயிருக்கே, புள்ளே! முனியன் அப்படிப்பட்டவனில்லா என்கிறது போலீசுக்கேதெரியுமே"

"தெரிஞ்சி—பண்ணையார் சொல்றப்போ என்ன செய்வாங்க"

"உங்க அண்ணன் எங்கே போயிட்டான்?"

"அதுதான் வக்கீல் ஐயரு வூட்டுக்கு ஓடி இருக்கு, போலீசிலே இருந்து அப்பனைக் கொண்டார."

"உங்க அம்மா...?"

"பொன்னியம்மா கோவுலுக்குப் போயிருக்கு..."

"வேண்டிக்கவா"

"ஆமாம், உக்காரு பெரியப்பா."

"நிக்கவே நேரமில்லே, உக்கார முடியுமாம்மா நம்மாலே. நம்மவினை அப்படி இருக்குது. போலீசிலே இருந்து உங்க அப்பன் வந்ததும் சொல்லி அனுப்பு, அதுக்குள்ளே நான் தோப்பு பக்கம் போயிட்டு வாரேன்"

"தோப்பு பக்கமா என்ன வேலை பெரியப்பா"

"பலாப்பழம் வேணும்னு குருக்கள் ஐயரு ஒத்தைக் காலாலே நிற்கருரு புள்ளே! போயி பறிச்சிகிட்டு வாரேன்"

"பெரியப்பா! நீராகாரம் கொடுக்கட்டுமா?"

"யாருக்கு,—எனக்கா? பைத்யக்காரப்புள்ளெ! எனக்குத்தான் மூணுநாளாக் காச்சலாச்சே..."

"மருந்து......"

"சாவு தான்! வேறே என்ன மருந்து இருக்கு நமக்கு, போ புள்ளெ! உள்ளே போ!"

முறை—மன்னர்களிடம் நாடு உடைமையாக்கப்பட்டுவிடும், கேடான கொள்கையைத் தென்னகம் ஏற்றுக்கொண்டதில்லை.

பெரிய தத்துவத்துக்குப் போவானேன் தம்பி, ஐவருக்கு ஒரு மாது பத்தினியாக இருக்கலாம் என்பதைக் கற்பனைக்கும் ஒத்ததாகத் திராவிடர் கருதவில்லை—வடக்கே அப்படிப்பட்ட பத்தினி பற்றிய காதை எழுதி, அந்த அம்மையின் உற்ற 'இரட்சகராக' பகவானே உடனிருந்து வந்தார் என்று கூறப்பட்டிருக்கிறது.

பண்பு நிச்சயமாக இங்கே வேறுதான் — அங்கே இருந்துவந்த 'ஆபாசங்களை'ப் பண்பு என்று கூறக் கூசுகிறது.

எல்லாம் சரி! ஆனால் இன்று என்ன நிலைமை?

வடநாட்டுத்தலைவர்கள் வாழ்த்துகிறார்கள், புகழ்கிறார்கள், நமது அருமை பெருமை கண்டு அகமகிழ்கிறார்கள். ஏன்?

இப்படிப்பட்ட பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியதான பொன்னாடு தங்களின் பிடியில் இருக்கிறது என்ற பூரிப்பு!!

ரோம் நாட்டவர் கிரேக்க நாட்டைத் தோற்கடித்து அடிமைப்படுத்தினர். பொன்னும் மணியும் வண்டி வண்டியாகக் கொள்ளையடித்துச் சென்றனர். அவற்றுடன் கிரேக்கர் பலரை அடிமைகளாகக் கொண்டு சென்றனர்.

மாளிகையில் மந்தகாசமாக, ரோம் வீரன் அமர்ந்திருப்பான்; நண்பர் அவனுடன் உரையாடுவதும், தங்கக் கோப்பையிலே வார்த்துத் தரப்படும் திராட்சை இரசத்தைப் பருகுவதும், போதை ஏறிய நிலையில், பொழிலில் கண்ட கடைக்கண்ணழகி பற்றியும், செம்பஞ்சுக்குழம்பு பூசப்பட்ட காலால், சேயிழை தன் மார்பகத்தே உதைத்தபோது அடைந்த உவகை பற்றியும், பேசிக்களிப்பார்; "ஆஹா! மறந்தே போனேன், நண்பர்களே! வெண்ணிலவில் வேல்விழியாளுடன் ஆற்றோரம் உலவினால் அடையும் ஆனந்தம் பற்றிய அருங்கவிதை ஒன்று இருக்கிறது, கேட்டதில்லையே நீங்கள் — சுவையுள்ள கவிதை', என்பான் விருந்தளிப்போன், "அப்படியா! கவிதையா! பாடிக் காட்டு நண்பா!" என்று கேட்பர் விருந்துண்போர்; "நானா பாடுபவன்! என்னிடம் இருக்கிறான் ஒரு அடிமை, அழகழகாகப் பாடுவான்" என்று கூறி, அழைப்பான், புலமைமிக்க கிரேக்கன், அடிமைக் கோலத்திலே வந்து நிற்பான், "ஏ! கவி! நேற்று பாடிக் காட்டினாயே கவிதை, அதைப் பாடு இப்போது, இவர்கள் கேட்கட்டும்" என்று கூறுவான், அடிமை பாடுவான்!! கீர்த்திமிக்க கிரேக்கநாடு தாழ்ச்சியுற்றபோது, நேரிட்ட, நெஞ்சைப் பஞ்சாக்கும் சோகச் சம்பவம்.

இப்போது, பரதநாட்டியம், கருநாடக சங்கீதம், கதகளி, திராவிட மொழி, திராவிடச் சிற்பம், இவைகளை இன்றும் பதம் கெடாமல் பாதுகாத்திடும் வித்தகர்களின் திறமை, புலமை ஆகியவற்றை வடநாட்டவர் பாராட்டிப் பேசும்போது, எனக்குத் தம்பி! ரோம் நாட்டின் மாளிகையிலே கண்ணீரையும் கவிதையையும் சேர்த்து வடித்துக் கொடுத்த கிரேக்க அடிமையின் கவனம்தான் வருகிறது.

மிகப் பழங்காலமுதற்கொண்டே வளமாக இருந்த திராவிடம், என்று அவர்கள் புகழ்கிறார்கள்! திராவிடரோ மலேயா காடுகளிலே மிருக வாழ்க்கையில் இருக்கிறார்கள்—கடல் கடந்து சென்று கைகட்டிச் சேவகம் செய்வது மட்டுமல்ல, கட்டை வெட்டுகிறார்கள், கல் உடைக்கிறார்கள், குப்பை கூட்டுகிறார்கள்.

மிக உயர்ந்த மொழி திராவிடத்தில் இருக்கிறது என்று அவர்கள் பாராட்டுகிறார்கள்—பாராட்டிவிட்டு, எனினும் 'இந்தி' படித்தால்தான் வாழ்வு உங்களுக்கு என்று துணிந்து கூறுகிறார்கள்.

அறிவாளரின் வாழ்விடம், கலையின் பிறப்பிடம் என்றெல்லாம் பேசுகிறார்கள் — பேசிவிட்டு, இவ்வளவு தகுதி இருப்பதால், தனி அரசு அமைத்துக்கொண்டு, தரணியில் ஓர் மணிவிளக்காகத் திகழ்வீர் என்றா கூறுகிறார்கள், 'இந்தியப் பேரரசின்' ஒரு பகுதி என்று பசப்புரை கூறி, அடிமைப் படுத்தி வைத்திருக்கிறார்கள்.

பொன்விளையும் பூமி என்கிறார்கள்—தரித்திரம் போக நாங்கள் திட்டம் தீட்டுகிறோம் அவசரப் படாதீர்கள் என்கிறார்கள்.

அவர்களின் புகழுரை நாணயமானதாக இருந்தால், ஏன் திராவிடம் தனி நாடாகத் திகழ்வதற்கு இசைவு தரக் கூடாது?

இவ்வளவு புகழுரைகளுக்கு ஏற்றதாக ஒரு எழில் நாடு இருக்க, ஏன் அதனை அடிமைக் காடாக்கி வைத்திருக்கிறார்கள்.

நல்ல பெண்! மிக நல்லவள்! கொஞ்சம் கூச்சம்! பயம்!! அடே அப்பா! கரத்தைப் பிடித்திழுத்ததும் சிவந்தேவிட்டது! கன்னத்தைத் தொட்டேன், மலர், மலரேதான்! மஞ்சம் சென்றபோது, சிறு குழந்தைபோல, விக்கி விக்கி அழுதாள்! பிறகு மயங்கிக் கீழே வீழ்ந்தாள்! தரையில் அவள் கிடந்தபோது, கூந்தல் கலைந்து, ஆடை கலைந்து இருந்த நிலையைக் காணும்போது, சிற்பி செதுக்கிய சித்திரப்பாவை தவறிக் கீழே விழுந்து கிடந்ததுபோல இருந்தது.

இப்படி ஒரு காமுகன் பேசினால், அதைக் கேட்டுக் காரிகையின் பெற்றோர், பெருமையா கொள்வர், பூரிப்பா அடைவர்! சிறிதளவு ரோஷமுள்ளவர் சீறிப் போரிடுவர்—அது அற்றவர்கள் தற்கொலை செய்துகொள்வர்.

அமைச்சர் சுப்பிரமணியம் வடநாட்டுத் தலைவர்கள் வழங்கும் புகழுரைகளைக் கேட்டுப் பூரித்துப் போகிறார், புளகாங்கிதமடைகிறார்!

அவரால் முடிகிறது! அவர் போன்றோரால் முடிகிறது! நம்மால் முடியவில்லையே—நமக்கு திராவிடம் அன்று வாழ்ந்த பெருவாழ்வுடன் இன்று அடைந்துள்ள அவலநிலையை ஒப்பிடும்போது, அணி பணி பறிகொடுத்த ஆரணங்கு, கழுத்து நெறிக்கப்பட்ட பேசும் பதுமை, மானமழிக்கப்பட்ட மாது —இத்தகைய கொடிய காட்சிகளல்லவா, நினைவிற்கு வருகிறது! நெஞ்சு நெருப்பிலிட்ட புழுவாகாமல் இருக்குமா! அவர்கள் மகிழ்கிறார்கள்—அத்தனைக்கும் ஈடாக அமைச்சர் பதவி கிட்டிவிட்டது என்று! நமக்கோ அரசு இழந்தோம், முரசு இழந்தோம், வளம் இழந்தோம், வகை இழந்தோம், தன் மானமுமா அழிந்துபடவேண்டும்! என்று எண்ணம் பிறக்கிறது.

"பைத்தியக்காரர்களே! என்னைப் பாருங்கள்! நான் உங்களைப்போல உதவாக்கரைக் கருத்துகளுக்கு என் மனதில் இடமளித்து இருந்தால், இந்த நிலையிலா இருந்திருப்பேன். மூலையிலல்லவா முக்காடிட்டு அழுதபடி இருந்திருக்க வேண்டி நேரிட்டிருக்கும்" என்ற கருத்துப்பட கனமான சுப்ரமணியம் கழறுகிறார்!

புகழுரையை அபிஷேகத் தரும் புது முறையில் ஈடுபட்டுள்ள வட நாட்டுத் தலைவர்களிலே ஒருவர், தத்தர் என்பார், பேசிய கூட்டத்திலே, அமைச்சர் சுப்ரமணியம் தீப்பொறி பறக்கப் பேசி, தீகாவாவது தீமூகாவாவது என்று ஏசினாராம்!

அரிய உண்மையையும் அருளியிருக்கிறார் அதுபோது.

பார்ப்பனரல்லாதார் இயக்கத் தலைவர் பேச்சைக் கேட்டு இருந்தால் நான் என்ன கதியாகி இருப்பேன், இப்போது இந்த தீகா தீமூகா தலைவர்கள் இருக்கிறார்களே அதுபோல எங்கோ ஒரு மூலையில் அல்லவா கிடந்திருக்க வேண்டி நேரிட்டிருக்கும் என்று பேசியிருக்கிறார்.

இதிலே ஒரு அரிய உண்மை இருக்கிறது, தம்பி, நிச்சயமாக இருக்கிறது.

காங்கிரசில் சேர்ந்ததால்தான், சுப்பிரமணியம் போன்றார், சபை நடுவில் சன்னத்துடன் இருக்க முடிகிறது! இல்லையேல், மூலை முடுக்குதான், சந்தேகம் இல்லை! காங்கிரசின் தயவு இருக்கிறது என்ற தகுதி தவிர தமது நிலைமைக்கு வேறு தகுதி இல்லை என்பதை அவர் நெஞ்சார உணருகிறார், நேர்மையாகச் சொல்லியும் விட்டார்! ஆனால் மற்றோர் பேருண்மை அவருக்குப் புலப்படவில்லை—இன்று அவர் இருக்கும் நிலையில் புலப்படாது!

"அது சரிடி அம்மா! அந்தப் பாவியோடு குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தா, இன்னேரம் கூலிக்காரியாகி, புளித்த கூழுக்கும் அழுகல் மாங்காய்க்கும் அலைந்து திரிந்து கிடக்க வேண்டிதான் வந்திருக்கும்" என்று துணிந்து கூறுகிறாள்; கொண்டவன் வறுமையின் பிடியில் இருப்பது கண்டு குலுக்கி நடந்து குட்டிக் குபேரனை வலையிலிட்டு, அவனுடன் வாழ்க்கை நடத்தி, வங்கி ஒட்டியாணத்துடன் மாங்காய் மாலையும் வைர ஓலையும் பச்சை மோதிரமும், பத்து ஏகர் நஞ்சையும், பங்களா தோட்டமும், 'சம்பாதித்த' சல்லாபி! ஆனால் உலகம், காரி உமிழ்கிறது! ஆஹா! அப்படியா! அம்மணீ! வாழும் வழி கற்றுக்கொடுத்த வனிதா மணியே! வாழி! வாழி!! என்று கூறி வாழ்த்துவதில்லை.

அவளிடம் வண்டி ஓட்டி வயிறு கழுவுபவன் கூட, வாழ்த்த மாட்டான்— பாழும் அங்கத்தை வளர்க்க இந்தப் பங்கப்பட்ட பாவியிடமல்லவா வேலை செய்யவேண்டி 'விதி' இருக்கிறது என்றெண்ணி வேதனைப் படுவான்.

ஆனால் இதெல்லாம் சாமான்யர்கள் விவகாரம்!

பேசினவர் அமைச்சர், உன்னையும் என்னையும் போல 'உருப்படத் தெரியாத'வரா!

எனக்கும் உனக்கும் தம்பி! அவர் போல 'அந்தஸ்து' பெறுவதற்கு என்ன வழி என்பது தெரிய வேண்டாம்—நாடு பொலிவுபெற, தன்னரசு பெற்றுத் திகழ வழி என்ன என்ற விஷயம் புரியட்டும்—போதும்.

புகழுரை பொழிவதன் மூலம் மயக்கிவிடலாம் என்று மனப்பால் குடிக்கும் வடநாட்டுத் தலைவர்களுக்கு, நாம் ஏமாளிகளல்ல என்பதை எடுத்துக்காட்ட வேண்டும்.

வந்த வண்ணம் இருக்கிறார்கள் வடநாட்டுத் தலைவர்கள்.

அவர்களின் உண்மை நோக்கத்தை உணர்ந்ததாலேதான் சேலத்தில் தோழர்கள், சீறி எழுந்து கண்டனக் குரலைக் காட்டினர், மேலும் விளக்கமாவதற்காகக் கருப்புக் கொடியும் காட்டினர்.

அடிக்கடி செல்வோம், அன்பாகப் பேசுவோம், புகழ் பாடுவோம் புன்னகை காட்டுவோம், அவர்கள் ஏமாந்து போவார்கள், 'எடுபிடி'யாகிவிடுவார்கள்! என்று எண்ணுகிறார்கள். முறையை மாற்றினால் ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு இல்லாமல் செய்துவிடலாம் என்று எண்ணும் வடநாட்டுத் தலைவர்கள்.

சாகசத்துக்குப் பலியாக மறுத்திடும் அணிவகுப்பு ஒன்று இருக்கிறது, அது வளர்ந்த வண்ணமும் இருக்கிறது. என்பதைக் காட்டியாக வேண்டும்.

எனவே இனி திராவிடம் வந்து 'தந்தினம்'பாடி, மேலும் தளைகளைப் பூட்டிட என்னும் வடநாட்டுத் தலைவர்களுக்கு, கழகம் கருப்புக் கொடி மூலம் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்ற கருத்தைத் தோழர்கள் பலர் கூறியுள்ளனர்—நான் முறைப்படி அதனை நமது பொதுச் செயலாளருக்குத் தெரிவித்திருக்கிறேன்.

தடியடி, துப்பாக்கி! சிறை! கலகம்! குழப்பம்! கல்லெறி! எனும் பலப்பல கிளம்பக்கூடும்—எனினும் இவைகளைக் கண்டு கண்டு நாம் பழக்கப்பட்டவர்கள். தம்பி! உன் கருத்து என்ன?

கண்ணே! மணியே! கற்கண்டே! என்று அன்புடன் பேசுகிறோம், அக்ரமக்காரர்களே, எங்களுக்குக் கருப்புக் கொடியா காட்டுகிறீர்கள், என்று வடநாட்டுத் தலைவர்கள் நெருப்பைக் கக்கக் கூடும்.

காட்டுமிராண்டிகள்! பைத்யக்காரர்கள்! சிறு பிள்ளைகள்! என்று மீண்டும் ஒரு முறை நேருபண்டிதர் நாக்கைத் திக்கோலாக்கக் கூடும்.

ஆனால், நமக்கு, வடநாட்டுத் தலைவர்கள் நம்மைப் பற்றி எப்படிப் பேசுகிறார்கள், புகழ்ந்தா? இகழ்ந்தா? வெல்லமா? வெடி மருந்தா? என்பதல்ல, கவனிக்கப்படவேண்டிய பிரச்னை. தம்பி! மலத்தை மிதித்துவிட்டாலும் கழுவிவிட்டால், நாற்றம் போய் விடுகிறது, பூசிய சந்தனம் வியர்வையில் கரைந்து காற்றோடு போய்விட்டாலும், மணம் மடிந்துபடுகிறது.

நம்மை வடநாட்டுத் தலைவர்கள் புகழ்கிறார்களா, இகழ்கிறார்களா—சந்தனம் பூசுகிறார்களா, நரகல் நடையில் ஏசுகிறார்களா, என்பதல்ல பிரச்னை.

நமக்குள்ள பிரச்னை — நம்மைப் போன்ற சாமான்யர்களுக்குத்தான் தம்பி அமைச்சர்களுக்கு அல்லவே அல்ல—வடநாட்டவர் நமது தாயகத்தை எப்படி நடத்துகிறார்கள் என்பதுதான்! அடிமைத் தளைபூட்டியா, அல்லது நேச நாடாக்கிக்கொண்டா, என்பதுதான் பிரச்சினை. வழுக்கி விழுந்த வனிதாமணிகள் வந்தார்க்கு விருந்தளிக்கட்டும், தாயகத்தின் தளை ஒடித்திட நாம் பணியாற்றுவோம்—நமது பங்கினைச் செலுத்துவோம்.

அன்புள்ள,

**அண்ணாத்துரை.**

## சிறையில் அவர்கள்!

எட்டு, ஒன்பது ஆண்டுகள் சிறை வாசம் அளிக்கப்பட்டிருக்கிறதாம், அவர்களுக்கு! செய்தகுற்றம், கொலையுமல்ல கொள்ளையுமல்ல, கோவாவை, அந்நியனிடமிருந்து மீட்பதற்காக, கடந்த ஜனவரி 26-ந்தேதி—(இந்தியக் குடியரசு நாளில்) தடையைமீறி, கோவாவுக்குள் நுழைந்தார்களாம். அவர்களுக்கு, ஜூன் முதல் தேதி—ஆறு மாதங்களுக்குப்பிறகு இப்படி தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் யார் தெரியுமா? 'தென்னிந்தியர்கள்' என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' குறிப்பிட்டுள்ளது. மலபாரைச் சேர்ந்தவர் ஒருவராம்! மற்றொருவருக்கு கன்னடமாம்!! பாரூர் அப்பு, உடுப்பி சீனுவாசராவ், என்பது அவர்கள் ஊரும் பெயரும். எட்டு, ஒன்பது ஆண்டுகள்! விடுதலைப் போரில் ஈடுபட்டமைக்காக!! சிறையில் கிடக்கிறார்கள் அவர்கள் — 'சிங்கம்' என கர்ச்சித்தபடி மாதாமாதம் சம்பளத்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள், காங்கிரஸ் மந்திரிகள்!




## தீ பரவுகிறது

கோவாவில், தேள் கொட்டுவது போல செய்திகள் வந்துகொண்டிருக்கும் இதே நேரத்தில், நேருபண்டிதர், ரஷ்ய பூமியின் அழகையும் வளர்ச்சியையும் ரசித்துக்கொண்டிருக்கிறார்! உலக அமைதிக்காக ரஷ்யா உன்னத முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாக, 'சர்டிபிகேட்'டும் அளித்துவிட்டார். ஆனால், அவரது 'குடைக்கீழ்' இருக்கும் கிழக்குபஞ்சாபில், 'அமைதி'போய் திங்கள் இரண்டாகிறது! தாராசிங் எனும் கிழவரும் அவரைத்தொடர்ந்து 2000-பேரும், சிறையில் கிடக்கிறார்கள். அமிர்தசரசில் மட்டும் நடந்துகொண்டிருந்த, 'பஞ்சாபிசுபா' அறப்போர், மாகாண முழுமையும் பரவும் அறிகுறியும் தெரிகிறது. அமைச்சர்கள் கூடிக் கூடி ஆலோசிக்கின்றனராம்! தீ, இங்கே பரவுகிறது! தென்றல் எம் நேரு—என்கின்றனர் தேசியப் பீரங்கிகள்!!

## அங்கும் இங்கும்

ரஷ்யாவில் பவனிவரும் நேருபண்டிதரை, தொழிலாளர்கள் யாவரும் தமது 'தோழன்' என்றுகொண்டாடினராம் — அவரை வேடிக்கை பார்ப்பதற்காக வேலையையெல்லாம் விட்டுவிட்டுக் கூடினார்களாம் — அப்பப்ப! ரேடியோ போட்டோ, தனி நிருபர்—பிரச்சாரகேந்திரம் வெகு வேகமாக வேலைசெய்துகொண்டிருக்கிறது. இருக்கட்டும்! ஆனால், அந்தளவுக்கு அங்கே தொழிலாளர்களால் கொண்டாடப்படுவதாகக் கூறப்படும் நேருவின் ஆட்சியிலிருக்கும் தொழிலாளர்கள் நிலை என்ன? கான்பூரிலுள்ள 40000 தொழிலாளர்கள் கடந்த ஒரு மாதகாலமாக, கூலி உயர்வும் உரிமைகளும் கோரி, வேலை நிறுத்தம் செய்துவருகிறார்கள்! 300-க்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பிடித்து, சர்க்கார் சிறையிலும் பூட்டி விட்டதாம். விரைவில், இந்தப் பஞ்சாலைப் பாட்டாளிகளின் நெஞ்சக் குறையை நீக்காவிட்டால் நாங்களும் அறப்போர் தொடுப்போம் — என்று, ஏனைய பாட்டாளி மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். இங்கு, நிலை, இது! ஆனால், ரஷ்யத் தொழிலாளர்கள் அங்கே அப்படி கொண்டாடுவதாக, பத்திரிகையாளர் சொல்லுகின்றனர். ஆமாம், கோயங்காவும், பிர்லாவும், டால்மியாவும், சீனுவாசனும் அனுப்பியுள்ள விசேஷ நிருபர்கள்தான், அப்படிச் சொல்வது!

## ஒவ்வொருவரும்!

இந்த 'நோய்' எப்படித்தான் பரவிற்றோ தெரியவில்லை! ஆசிய நாடுகளிலுள்ள ஒவ்வொரு பிரதமருக்கும், ஏதாவது ஒரு வெளிநாட்டுக்குப்போய் 'விருது' பெறவேண்டும் — அதைக் காட்டி, தம்மொத்த தலைவர்கள் மத்தியில், மகிழவேண்டும்—எனும் ஆசை, அதிகமாகிவருவதாகத் தெரிகிறது. 'விருது பெறும்' பாதை, நம்ம நேருபண்டிதர் ஒருவருக்கே ஏழட்டு ஆண்டுக் காலமாகச் சொந்தமாயிருந்தது! இப்போது சகலரும் பின்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள்!! இந்த வெளிநாடுகளிருக்கின்றனவே, அவைகளும் யாராயிருந்தாலும் வரவேற்று உபசரிக்கவும் ஆரம்பித்துவிட்டன. ரஷ்யாவில், நேரு வலம் வர ஆரம்பித்த சமயத்திலே — யுகோஸ்லேவியாவின் அரசியல் விருந்தினராக இருந்திருக்கிறார் பர்மியப் பிரதமர் நூ—அதற்குச் சில தினங்களுக்கு முன்புதான் இந்தோனேஷியப் பிரதமர் ஜோஜா, சீனநாடு சென்று சூ-என்-லாயுடன் களித்து அருந்தி ஊர் திரும்பியிருக்கிறார்.

## ஏது துரோகம்?

“குதிரை வாங்கக் கொடுத்த பணத்தைக் கொண்டு கோயில் கட்டினார், மாணிக்கவாசகர்! கஜானாவுக்குச் செலுத்தவேண்டிய நிதியைக் கொண்டு கடவுளுக்கு கோயில் எழுப்பினார் ராமதாஸ்!! அவர்கள் எல்லாம, பக்தர்களாகிவிட்டபோது, என்னை மட்டும் ஏன் கைதுசெய்கிறீர்கள்? எஜமானத் துரோகமல்ல, நான் செய்தது—கடவுள் காரியம். அவர்களைவிட நான் என்ன மட்டமா! கல்லாயிருக்கும் சாமிக்கு அவர்கள் காசுகொடுக்கிறார்கள்,-நானோ 'நிஜ'க் கடவுளைப் பார்ப்பதற்காகவே, ரூ. 6000 காணிக்கை செலுத்தினேன். கடவுளைக் காட்டுவதாகச் சொன்னான், ஒரு சந்நியாசி. அதற்காகச் செலவு செய்தேன்! பணம் என்னுடையதல்லதான்; கடை முதலாளி கொடுத்ததுதான். அவர் யார்! நான்யார்! நீ, யார்! —எல்லாம், ஈசனின் மாயாஜாலங்கள் தானே? ஊம்! என்னைவிட்டுவிடுங்கள்!” என்று சொல்லுகிறார், போலீசாரால் சென்னையில் கைதுசெய்யப்பட்டிருக்கும் பாஸ்கரராவ் என்பவர். அவர், இதுபோல் கோர்ட்டிலும் பேசினால்? மதப்பெருமைகளைபற்றிப் பேசும் நமது நீதிபதிகள், என்ன சொல்வார்களோ?

Edited, Printed & Published by C N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95 Tirukkachinambi St. Kancheepuram.